ஆரம்பக் கல்வி

நவம்பர், 1933


T15 m 2H,N33
N33.1.6
190331

# ஆரம்பக்கல்வி
# ELEMENTARY EDUCATION

பொருளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 205 |
| கட்டாயப் படிப்பு | 206 |
| பத்திரிகை யுலகு | 209 |
| சுகாதாரப் பகுதி | 213 |
| பொய்யா மொழிப் புலவர் | 217 |
| திப்புவின் தலைப்பாகை | 219 |
| குயவன் குறும்பு | 220 |
| காதல் | 221 |
| சிறுகதைப் பகுதி | 225 |
| ஆசிரியர் பகுதி | 226 |
| உதய குமாரன் | 229 |
| பெற்றோர் | 233 |
| சங்கக் குறிப்புகள் | 237 |
| இயந்திர மனிதன் | 243 |
| முட்டையில் எலிக்குஞ்சு | 244 |



72
T15:m311,N33
N33-1.6
190331






உள் நாடு விலை அணா 1½ , மலர் 6. வெளி நாடு விலை அணா 3

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட

| | | | |
|---|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன், | 1 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு .... .... | 2 | 0 | 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்காபோர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி" என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தத்தம் குறைகள் நீங்கி, ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:
பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுபக்கம் ஒரு தடவைக்கு | ரூ. | | 10 | 0 | 0 | |
| அரை பக்கம் | ,, | ,, | 5 | 0 | 0 | |
| கால் பக்கம் | ,, | ,, | 3 | 0 | 0 | |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஐயாவர்கட்கு

அமுலிலி—

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணதிலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய
மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும்,
முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர
செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

**பத்திராதிபர்:— பி. வீரராகவன்**

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர், 1. | ஸ்ரீமுக௵ கார்த்திகைமீ 1933௵ நவம்பர் | இதழ், 6.

## கடவுள் வணக்கம்.

பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி யகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கு
மின்னாகிப் பரவியின்ப வெள்ளந் தேக்க
வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந் தேவே.
மலைமேலுங் கடன் மேலு மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்குங் கோவே
நிலைமேலு நெறிமேலு நிறுத்து நின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும் வேதக்
கலைமேலு மெம்போல்வா ருளத்தின் மேலுங்
கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின் மேலுந்
தலைமேலுந் முயிர்மேலுந் முணர்வின் மேலுந்
தகுமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே.
[திரு அருட்பா]

# சத்திய மூர்த்தி ஐயரவர்களும் கட்டாய இலவசப் படிப்பும்.

திரு, சத்தியமூர்த்தி ஐயரவர்கள் பெங்களூரில் நிகழ்த்தியசொற்பொழிவில் "கட்டாயப் படிப்பை இலவசமாகச் செய்யவேண்டியது அவசியம் தான். ஆனால் சம்பளம் கொடுக்க சக்தியுள்ள தாய்தந்தையர்களிடத்தில் சம்பளம் பெறலாம். இவ்வித முறையே சென்னையில் அனுஷ்டிக்கப்பட்டு சரிவர நடக்கின்றது இத்தகைய முறையையே மைசூர் சமஸ்தானத்திலும் கையாளலாம் என்பதாகக் கூறினார்" இப்பெரியார் இவ்வுபதேசத்தை எந்த ஆதாரத்தின்மீது உபதேசம் செய்தனரோ தெரியவில்லை சென்னையில் ஏறக்குறைய 140 கார்ப்பரேஷன் பாடசாலைகளும் 200 எய்டட் பாடசாலைகளும் நடந்துவருகின்றன. 1925-ல் கட்டாய இலவசப் படிப்பு அமுலுக்கு கொண்டுவரப்பட்டு 1931 ௵ வரையில் கார்ப்பரேஷனால் நஷ்ட ஈடும் எய்டட் பாடசாலைகளுக்கு கொடுக்கப்பட்டு கட்டாய இலவசப் படிப்பும் ஒருவாறு ஒழுங்காகவே நடைபெற்றுவந்தது. 6-லிருந்து 11 வயதுவரையிலுள்ள பிள்ளைகளும் அதிகமாக எல்லாப் பாடசாலைகளிலும் வாசித்துவந்தனர். இதில் கார்ப்பரேஷனுக்கும் கவர்மெண்டாருக்கும் நஷ்ட ஈட்டை கல்விபண்டிலிருந்து கொடுப்பதா, பொதுப்படையான வரி பணத்திலிருந்து கொடுப்பதாவென்ற விவாதம் அதிகரித்தது. கவர்ன்மெண்டார் நஷ்ட ஈட்டை பொது வரிப்பணத்திலிருந்து கொடுக்கவேண்டுமென்றார்கள். கார்ப்ரேஷன் அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ளாமல் கல்வி பண்டிலிருந்து தான் கொடுப்போம் இல்லையேல் நஷ்ட ஈட்டை கொடுக்க முடியாதென்பதாக மறுத்தார்கள். இந்த போராட்டத்தில் வக்கீல்களும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும், செல்வந்தர்களும் நிறைந்த இடங்களிலுள்ள சில எய்டட் பாடசாலை மானேஜர்கள் சம்பளம் வசூல் செய்வது நலம் என்று அதன்படி சட்டத்தைத் திருத்திவிட ஒரு கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியை பெருந்தகையான மானேஜர்கள் எதிர்த்து நின்றனர். அது சமயம் அரசாங்கமும் பணக் கஷ்டத்தில் சிக்கிக்கொண்டிருந்தது. "சாக்கினதே சாக்கு" என்ற பழமொழிப்படி ஆரம்பக் கல்வி பொறுப்பை ஏற்றுக்கொள்ளாதவர்களாய் அரசாங்கமும் இக்கிளர்ச்சியை ஆமோதித்து சட்டக்கில் கட்டாய இலவசப் படிப்பு

19033



அமுலிலிருக்குமிடங்களில் எய்டட் பாடசாலைகள் சம்பளம் விதித்துக் கொள்ளலாமென 1932-முதல் ஓர் சீர்திருத்தம் செய்துவிட்டது.

### எய்டட் பாடசாலைகளின் நிலைமை

இச் சீர்திருத்தச் சட்டத்தின்படி சம்பளங்கள் விதிக்கப்பட்டன. இது காரணமாய் வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், செல்வந்தர்கள் நிறைந்த மைலாப்பூர், திருவல்லிக்கேணி, முத்தியால் பேட்டை, சௌகார் பெட், முதலிய டிவிஷன்களிலுள்ள யேதோ சில எய்டட் பாடசாலைகள் அதிலும் 8-வது வகுப்பு வரையிலுள்ள பாடசாலைகள்தான் தங்களுக்கு முனிசிபாலிடியார் கொடுத்துவந்த நஷ்ட ஈட்டுத்துகைக்கு பலவித கஷ்டங்களுடன் ஏறக்குறைய வசூல் செய்கின்றன. ஏனைய100-க்கு 80 பாடசாலைகளுக்கு சம்பளம் வசூலென்பதே குதிரைக் கொம்பாக இருக்கின்றது. நாளுக்கு நாள் பாடசாலைகளில் பிள்ளைகள் குறைந்துகொண்டே போகின்றனர் அவ்விதம் குறைந்த பிள்ளைகளாவது இதர பாடசாலைகளில் வாசிக்கின்றார்களா வென்றால் அதுவும் கிடையாது. சம்பளம் கட்ட இயலாத பிள்ளைகள் அநேகர் தெருத்திரிந்து வருகின்றனர். இது இப்படியிருக்க, கார்ப்பரேஷன் பாடசாலைகளைக் கவனிப்போம்.

### கார்ப்பரேஷன் பாடசாலைகளின் நிலைமை

சில பாடசாலைகளில் பிள்ளைகள் நிறைந்து வழிகின்றனர். சில பள்ளிக் கூடங்களில் மேல் வகுப்பில் பிள்ளைகளே கிடையாது. சம்பளம் கொடுக்கக்கூடிய பிள்ளைகளெல்லாம் கார்ப்பரேஷன் பாடசாலைகளில் ஏழைப் பிள்ளைகளை சேர்ப்பதா பணம் கொடுத்து வாசிக்க சக்தியுற்ற பிள்ளைகளைச் சேர்ப்பதா என்பதான இதர மாகாணங்களிலுள்ளதைப்போல ஒரு சட்ட வரம்பும் கிடையாது. தப்பித்தவறி கார்ப்பரேஷன் தலைமை உபாத்தியாயர் "ஐயா! இங்கு ஏழைப்பிள்ளைகளுக்கே இடமில்லை. சம்பளம் கொடுக்கக் கூடியவர்கள் அடுத்த எய்டட் பாடசாலைகளில் வாசிக்க விடுங்கள் என்றால் அத்தலைமை உபாத்தியாயர்மீது பிடிஷன்கள் பறக்கின்றன அதனால் அவர்கள் கல்வித் தொழிலையும் சரிவரச்செய்ய இயலாது. பிள்ளைகளை ஆடுமாடுகளைப் போல் பாடசாலையை நிறப்பவேண்டியவர்களாக இருக்கின்றனர். ஒரு வகுப்பில் 30 பிள்ளைகளிருந்தால் 5 மணி நேரத்தில் 7-விதமான பாடங்களை எவ்வாறு சரிவர நடத்தமுடியும். சர்வ கலாசாலைகளைப் போலவும். உயர்தரப் பாடசாலைகளைப் போலும் பிரசங்கம் செய்து

விட்டால் சிறு பிள்ளைகள் யெவ்வாறு கல்வி கற்கமுடியும். இன்னும் எய்டட் பாடசாலை மானேஜர்கள் பழையபடி நஷ்ட ஈட்டைக் கொடுக்கும்படியான சட்ட மேற்படுத்த வேண்டுமென்ற கிளர்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான பிள்ளைகள் பாடசாலையில் வாசிக்காமல் தெருவில் திரிந்துவருகின்றனர். கட்டாய படிப்பின் சட்டத்தின்படி பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாத தாய் தந்தையர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எவரும் எடுத்துக்கொண்டதாகவும் தெரியவில்லை. இந்த அல்லோ கொல்லமான நிலையில் திரு, ஐயரவர்கள் கட்டாயப்படிப்பு சென்னையில் வெகு விமரிசையாக நடக்கின்றதென பறைசாற்றுகிறார். இவரது மேடைப் பிரசங்கத்தை எவ்வாறு நாம் ஒப்புக்கொள்ளமுடியும்? உட்கார்ந்த இடத்திலும், நின்ற இடத்திலெல்லாம் ஆரம்பக் கல்வியைப்பற்றியும், 5-வருட திட்டமென்றும், பி. ஏ. பட்டதாரிகளை ஆசிரியராக வைக்கவேண்டுமென்றும் மேடைகளில் பிரசாரம் செய்கின்றார். உண்மையில் இது வரையில் அவர் ஆரம்பக் கல்வி பரவுதற்காக எத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொண்டார் என்பதுதான் விளங்கவில்லை. கோபாலக் கிருஷ்ண கோகலேவைப்போல் அமைதியும், ஆற்றலும், ஆழ்ந்த சிந்தனையும், தியாகமும், வீரமும், ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டும் உள்ள மக்களே இவ்வாரம்பக்கல்வியின் அபிவிருத்திக்கு உழைக்க முடியுமே தவிர, மேடைப் பிரசங்கத்திற்கும் ஆரம்பக் கல்விக்கும் வெகு தூரம் என்பதை திரு, ஐயரவர்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவர் உண்மையில் ஆரம்பக் கல்வியை நாட்டில் பறப்ப வேண்டும், ஆரம்பாசிரியர்களும், தேசமும் முன்னேற்றமடைய வேண்டும் என்ற உண்மை யெண்ணம் அவருக்கு இருக்குமானால் அவர் நிதானமாகவும் அமைதியாகவும் அடுத்த மாகாணங்களிலுள்ள ஆரம்பக் கல்விச் சட்டங்களையும், கட்டாய இலவசப் படிப்பு சில மாகாணங்களில் எவ்வாறு பாவின வென்பதையும் சில மாகாணங்களில் பரவுதற்கு எத்தகைய கஷ்டங்கள் இருக்கின்றன வென்பதையும், நன்றாக வாசித்து நமது மாகாணத்தில் ஆரம்பக் கல்வி பரவும் வழியைச் சொல்லட்டும்.

### வழி ஒன்றுதான் உண்டு

எல்லா பாடசாலைகளிலும் இலவசமாக ஏழை பணக்காரர் பிள்ளைகளென்ற பேதம் பாராட்டாமல் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் இல்லையேல் வங்காள மாகாணத்திலுள்ளதைப்

# பத்ரிகை யுலகும் ஆசிரிய மானேஜர்களும்

எஸ் ஆர். இரகுநாதன் [சின்னப்பம்பட்டி, சேலம்]

---

இக்காலத்தில் உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டுவது, ஒவ்வொரு மனிதனின் கடமை யென்பதை யுணரவேண்டும். மனிதனுக்கு வேண்டும் சாதனங்கள் இருவகைப்படும். அதாவது இகலோகத்துக்குரியவை பரலோகத்துக்குரியவை, அதாவது உடற்பாதுகாப்பு, உயிர்ப்பாதுகாப்பு என சுருங்கக் கூறலாம். இவ்விருவகைச் சாதனங்களை எல்லாமக்களுஞ் சுலபமாக அறிநது நடத்தற்கு ஏற்ற நெறிகளை வகுப்பதுவே அரசாங்கம்.

### பண்டைக் கால நெறி

இரயில் தபால், தந்தி, கார், விமானம், முதலிய போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாதிருந்த காலத்தில் மாந்தர்கள் தத்தம் வீடு கிராமம் இவற்றைப் பற்றித் தெரிந்துகொண்டு அரசன் இயற்றும் ஆணைகளைப் பெரியோர்வாய்க் கேட்டறிந்து அறத்தின் வழி நடந்து

---

போல் 30 ரூபாய்க்கு வருமானத்தின் போர்டு அதிகமுள்ள தாய் தந்தையர்கள் முனிசிபல், பாடசாலையானாலும் சரி எய்டட் பாடசாலையானாலும் சரி செகண்டரி பாடசாலைகளைப்போல் சம்பளம் கொடுத்தே தீரவேண்டும் என்றும் ஓர் நிபந்தனை ஏற்படுத்தவேண்டும். ஏழை பிள்ளைகளுக்கு முனிசிபல் போர்ட் பாடசாலையாயிருத்தல் இலவசமாக சொல்லிக் கொடுக்கட்டும், இதர எய்டட் பாடசாலைகளாயிருக்கும் பட்சத்தில் அவ்வேழைப் பிள்ளைகளுக்கான சம்பள நஷ்ட ஈட்டை முனிசிபல் அல்லது போர்டார் கொடுப்பதுதான், நியாயம், காலஞ் சென்ற கோபால கிருஷ்ண கோகலேயும் 15 ரூபாய் வருமானத்திற்கு குறைந்த ஏழைப் பிள்ளைகளுக்கு மாத்திரம் இலவசமாக கல்வி கற்பிக்க சொல்லினரே தவிர, பணக்காரர்களுக்கு எப்பாடசாலையாயிருந்தாலும் சம்பளம் வாங்கவேண்டுமென்றார். இவ்வித ஏற்பாடு ஒன்று நடந்தாலல்லது ஆரம்பக் கல்வி நம் நாட்டில் சரிவர பரவுவதற்கு வழியில்லை. திரு, ஐயரவர்கள் என்ன செய்கின்றனரோ பார்க்கலாம்?

வந்தனர். ஆங்காங்கு கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழப் பழகியிருந்தனர்.

### தற்காலப் போக்கு

ஆயிரம் மைலையும் அரை கொடியிற் சுவரவல்ல சாதனங்கள் நிறைந்திருக்கின்ற இக்காலத்தில் சுலபத்தில் மக்களும் பொருளும் இடம்விட்டு இடம் பெயர்கிறார்கள். எதுவும் கொஞ்ச நாட்கள் சேர்ந்தாப்போல் ஒரேமாதிரி நிற்பதில்லை. ஆகையால் தினந்தோறும், உலகத்தில் ஆங்காங்கு நடக்கும் மாறுதல்களை யறிந்து தமது நிலையையும் மாற்றிக்கொண்டு வந்தாலொழிய, மக்கள் செவ்விய துறையில் வாழலரிது.

### ஆசிரிய மானேஜர்கள்

ஆசிரிய மானேஜர்களுக்கு சென்ற 15 ஆண்டுகளுக்கு முன்னர் கொடுக்கப்பட்டு வந்த மாதிரி பிள்ளைகளின் சராசரியின் பேரிலும் தேர்ச்சியின் பேரிலும் கிராண்டு கொடுக்கப்படுவதில்லை. கல்வி முறையும் பழைய முறை இக்காலத்துக்கு உதவாது. எத்தனையோ புதிய சட்டங்கள் புதிய புதிய உத்திரவுகள் மிக மிகப் புதிய உத்திரவுகள். தமிழ் மட்டும் படித்தவர்களே ஆசிரியராயிருக்க முடியாது. குறைந்தது மெட்ரிகுலேஷனுவது படித்தவர்கள் தான் ஆசிரியர்களாய் இருக்கலாம். இந்த உத்திரவுகளுக்குக் கீழ்படியாமல் வெறும் படிப்பை மட்டும் எவ்வளவு சிறப்பாகச் சொல்லிக் கொடுத்தாலும் அவைகள் பொய்ப் பள்ளிக் கூடங்கள். இவைகள் எல்லாம் எப்படித் தெரியும்.

### பத்திரிகைகள் படித்தால் தான்

இக்காலத்தில், ஒரு கையைத் தட்டினால் சத்தம் கேட்காது. பல கைகள் சேர்ந்து தட்டப்படவேண்டும், போஸ்டல் சங்கங்கள், மதச் சங்கங்கள், பல சமூகச் சங்கங்கள். ஒவ்வொன்றுக்கும் விஷயத்தை உணர்த்தும் பத்திரிகைகள் இவ்வாறு எத்தனை சங்கங்களும் எவ்வளவு பத்திரிகைகளும் இருக்கின்றன என்று எண்ணிப் பாருங்கள். பெரும்பாலும் எல்லாப் பத்திரிகைகளும் ஆரம்பக் கல்விக்காக, வேலை செய்து வந்தாலும், ஆசிரியர்களுள் அதை கவனிப்பவர் வெகுசிலர் அநேக பத்திரிகைகள் ஆசிரியர்களுக்கெனத் தோன்றி மறைந்துவிட்டன. இப்போதிருப்பவையும், ஒரு சில சந்தாதாரர்களுடன் சிறப்பு வகையில் வெளிவராமல் மங்கி யிருக்கின்றது. இதற்காக நாம் செய்யவேண்டுவது என்ன,



### சங்கத்தை வளர்த்த வேண்டும்

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆசிரிய மானேஜர்கள் சங்கம் ஒன்று கூடி, அச்சங்கத்தின் கண் ஆசிரியர்க்கான பத்ரிகைகளை வருவித்து ஒவ்வொருவரும் உலக விஷயங்களை அறிந்து தங்கள் தொழில் முறைகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்துக்கொண்டு தற்கால உலகத்தோடு ஒத்து உழைக்க முன்வரவேண்டும். பத்திரிகைகளால் பல விஷயங்களை அறியலாம். இதுவரை நாம் புறக்கணித்திருந்ததால் என்ன நேர்ந்தது.

"ஒவ்வொரு வருஷமும் அநேக பள்ளிக் கூடங்கள்
மூடப்பட்டுவிட்டன."

உலகத்திற்கு ஒட்ட நமது பாடசாலைகளை நவீன நாகரிகத்தில் நடத்திவரக் கற்றுக்கொள்ளாததால் ஒருவகையில் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுகிறதே யொழிய, அநேக பாடசாலைகள் சரியாய் நடவாதவை யென்றும், கிராண்டுக்காக வைக்கப்படுகின்றன என்றும், இவைகளை நாளடைவில் மூடிவிட வழிதேடவேண்டுமென்றும், கல்வி யிலாகா அதிகாரிகளும் தாலூக்கா போர்டு, முனிசிபாலிடி அங்கத்தினர்களும் உள்ளூர சிந்தித்து வருகிறார்கள். ஆனால் கிராம ஜனங்கள் இத்தகைய பள்ளிக் கூடங்களையே இன்னும் விரும்பிவருவதும் அவர்களுக்குத் தெரிவதோடு, மக்களுக்கு ஏற்ற வழியில் கல்விபயன் படுவதில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆகையால்,

### நாம் செய்யவேண்டுவது என்ன?

ஆரம்பக் கல்விக்காக உழைக்கும் பத்திரிகைகளைப்படித்து, பொதுவாக, ஆரம்பக்கல்வி மக்களுக்குப் பயன் படுந்துறையில், திருத்தி யமைக்கவும், பள்ளிக் கூடங்கள் ஆசிரியர்களின் சுதந்தர உணர்ச்சியோடு கிராமத்திற்குத் தக்கவாறு நடத்தப்பட்டுவந்தால் தான் விருத்தியாகும் என்ற கொள்கையையும், பத்திரிகை வாயிலாக எடுத்துக்காட்டி வெளியுலகத்தாருக்கு நமது ஸ்தானங்களின் உண்மையை நிலைநாட்ட வேண்டும் என ஆசியமானேஜர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ஹையர் கிரேட் பரீட்சைக்குப் போகவேண்டுமென்கிற உத்திரவை மாற்றவேண்டுமாம்?

(18-11-33)

ஆரம்பாசிரியர்கள் லோயர் கிரேட் சர்ட்டிபிகேட்டை ஹையர் கிரேட்சர்ட்டிபிகேட்டாக மாற்றவேண்டுமானால் ஹையர்கிரேட் பரிட்சைக்குபோகவேண்டுமென்கிற ஜி. ஓ. நெ. 1581 (4-9-33) என்ற உத்திரவு தங்கள் தாலூக்காவிலுள்ள லோயர் கிரேட் ஆரம்பாசிரியர்களை அதிகமாக பாதிக்கப்படுவதாகவும் அவ்வுத்திரவு மாற்றப்படவேண்டுமென்றும் அங்கு விஜயம் செய்த கனம் கல்விமந்திரி யிடத்தில் வாலாஜா பெட் தாலூக்கா ஆரம்பா சிரியர்கள் பேட்டிகண்டு பேசினர். இப்புதிய உத்திரவை (4-9-33) க்கு முன்பே பாஸ் செய்திருக்கும் லோயர் கிரேட் உபாத்தியாயர்களை பாதிக்காமலும் [4-9-33] க்கு பிறகு பாஸ் செய்யும் உபாத்தியாயர்களுக்கு இவ்வுத்திரவை அமுலுக்கு கொண்டுவர இப் புதிய உத்திரவை சற்று மாற்றி விடுவது நலம்.

## ஆரம்பக் கல்விக்கு ஓர் அதிர்ஷ்டம்.

நமது சென்னை மாகாணத்தில் ஆரம்பக் கல்வி தற்சமயம் எத்தகைய நிலையில் இருக்கின்றது கல்வி எவ்வளவு தூரம் மக்களுக்கு பரவி இருக்கின்றது. அதை தற்போது வரப்போகும் புதிய அரசியல் சீர்திருத்தத்திற்கு தக்கவாறு எவ்விதம் சீர்திருத்தலாம் என்பதை விசாரிக்க அரசாங்கத்தார், கல்வி யதிகாரிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் இதர அங்கத்தினர்களும் கலந்த ஒரு கமிட்டியை ஏற்படுத்த 21 சட்டசபை அங்கத்தினர்கள் சட்டசபைக்கு தீர்மானங்கள் அனுப்பியிருக்கின்றனர்.

இந்த தீர்மானத்தை பல்லாரி திவான்பகதூர் எம். கோபாலஸ்வாமி முதலியார் அடுத்த சட்டசபையில் கொண்டுவருவார்களாம். இத்தனை நாட்கள் கழிந்தாகிலும் இத்தகைய எண்ணம் நமது சட்ட சபை அங்கத்தினர்களுக்கு வந்ததைப்பற்றி நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

### லிட்டில் ஹெயில்ஸ் துரையவர்களுக்கு புதிய வேலை

சென்னை கல்வியிலாகா டைரக்டராக விருந்த திரு, லிட்டில் ஹெயில்ஸ் துரையவர்களை பரோடா சமஸ்தானத்தில் இன்னும் கல்வி யிலாகாவில் புதிய சீர்திருத்தங்களைச் செய்வதற்காக பரோடா கல்வி யதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

# சுகாதாரப் பகுதி

## ஜலமும் அதன் சரியான உபயோகமும்.

எம். வி. நரசிம்மராவ், பர்ஹம்பூர்.

ஜலமானது, மனிதன், மிருகம், பிராணி பக்ஷி, மரம் முதலிய யாவற்றிற்குமே இன்றியமையாத வஸ்து. ஜலம் இராவிடில் ஒன்றும் பிழைத்திரா. இது பகவானால் நமக்கு அளிக்கப்பட்ட வஸ்து. சிருஷ்டியில் இதுதான் முதல். ஜலத்தின் முக்கியத்தை மனதில் வைத்துக்கொண்டு, சிருஷ்டியில் சிறந்ததாகிய மானிடர்க்கு இதன் உபயோகம் இன்னதென்பதை எடுத்துரைப்போம். இது தேகத்தின் தசைநார்களுக்கும் இரத்தத்திற்கும் அவசியமான பொருள். தேகம் தன் தொழிலைச் சரிவரச் செய்யவேண்டுமானால், தினம் அதற்கு ஜலம் அவசியம் வேண்டும். தேகத்தின் எடையில் மூன்றில் இரண்டு பங்கு ஜலம்: ஒவ்வொரு கெட்டியான ஆகாரப்பதார்த்தத்திலும், அதன் எடையில் பாதி ஜலம்: ஒரு யுவனுக்கு, அவனது தேகம் கிரமமாயும் சுறு சுறுப்பாயும் வேலை செய்யும்போது, தினம் 5 பவுண்டு ஜலம் கழிந்துபோகின்றது. அதில் பேர்பாதி, சர்மத்தின் மூலமாயும் போய் விடுகிறது அதில் பேர்பாதி, சர்மத்தின் மூலமாயும் நுரையீரல் மூலமாயும் போய்விடுகிறது. ஜலமானது இரத்தத்தை சுத்தி செய்து பலத்தையும் ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. இது எல்லோருக்கும் இன்றியமையாத வஸ்துவாயிருந்தபோதிலும், அதை துர்விநியோகப்படுத்தினால், தேகத்திற்கு அது கெடுதலை விளைவிக்கும். வெவ்வேறு சமயங்களில் சாப்பிடுவதும் பானம் குடிப்பதும் இயற்கை முறை. ஒருவரும் இதை மீறி நடக்க முடியாது. இயற்கையை வெல்வது கடினம்

ஜலம் சுத்தமாயிருந்தால் அநேக வியாதிகளைத் தீர்த்து தேகத்திற்கு வலுவைக் கொடுக்கும். ஆனால் இது அசுத்தமாயிருந்தாலோ காலரா டைப்பாய்டு ஜுரம் முதலிய விஷக்கிருமி வியாதிகளை உற்பத்தி செய்து மாணத்தை விளைவிக்கும். இந்த வியாதிகளைத் தடுக்க வேண்டுமானால், ஜலத்தைக் கொதிக்கவைத்து வடிக்கட்டி சாப்பிட

வேண்டும். ஜலத்தை சுத்தம் செய்வதற்கு அநேக முறைகள் உண்டு. ஆனால் கொதிக்க வைப்பதுதான் சுலபமான முறை.

இந்த உபாயத்தினால், அதற்கு தற்காலத்திலுள்ள கடினம் நீங்கி, அதன் அசுத்தங்கள் யாவும் போய், ஜலம் அபாயமில்லாமல் ஆகி விடும்.

சாப்பாடு சாப்பிடும்போது ஜலம் பருகுவதினால், அது ஜீரணத்திற்கு உதவியாயிருக்குமென்றும், மலம் கழியச் செய்யுமென்றும், ஒரு வித அபிப்பிராயம் உண்டு. சாப்பாடு சாப்பிடும்போது ஜலத்தையும் மற்ற பானங்களையும் பருகுவதினால், உமிழ்நீர் இரைப்பை ரஸம் முதலியவற்றை அது நீராக்கி, அதனால் ஜீரணத்திற்குக் கெடுதல் உண்டாகும். பானங்கள் குளிர்ந்த பானங்களாக விருந்தால், அவற்றைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில் தேகத்தின் உஷ்ணக்கிரமத்திற்குச் சரியாக விருந்தால்தான் ஜீரணம் செவ்வையாய் ஆகும். இதனால், வாயிலும் இரைப்பையிலும் ஜீரணம் கம்மிப்பட்டு தேகம் பெருத்துப் போகும். சுடச் சுட கறிகளை சாப்பிடும்போது பானத்தை பருகுவதற்கு ஒரு தூண்டுதல் போலாகும். சாதம் பானம் யாவும் ஒன்று சேர்ந்து, இரைப்பையை விரிக்கச் செய்யும். இரைப்பை இருதயத்திற்கு அருகாமையில் இருப்பதால் அதற்கு அதிர்ச்சி ஏற்பட்டு அதனால் பலஹீனப்படும். ஆகாரத்துடன் ஜலத்தைப் பருகுவதினால், அதை மென்று சாப்பிடமுடியாது. மெதுவாய் விழுங்க முடியாது. இதனால் ஆகாரம் அதிகமாக உண்ண நேரிடும். மாமிசம் தின்பவர்களுக்கு இன்னும் கஷ்டம். மாமிசத்தை அரைகுறையாய் மென்று தின்றால் குன்மவியாதி உண்டாகும். ஆனது பற்றி, சாப்பாட்டுக்கிடையில் எப்போதும் பானத்தைப் பருகவேண்டுமே யொழிய சாப்பாட்டுடன் குடிக்கக்கூடாது.

தவிர, சுறு சுறுப்பாய் வியாயாயம் எடுத்துக்கொண்ட பிறகும் தேகம் களைப்பாயிருக்கும்போதும், அநேகர் ஜலம் அருந்துகிறார்கள். இதனால் அநேக கெடுதல் உண்டு. அநேகர் வெய்யலில் கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு உடனே ஜலம் பருகுகிறார்கள். இது நாட்டுப்புறத்திலுள்ளவர்களுக்கு சகஜம். அதிக களைப்பு நேர்ந்தவுடனே, இரத்தத்திற்கு ஜலம் அதிக தேவையாயிருக்கிறது. உடனே குடித்தால், அது இரத்தத்தில் உறிஞ்சப்பட்டு, இரத்த அமுக்குதல் முதலிய கெடுதல்கள் நேரிடுகின்றன. வியாதியஸ்தர்கள், கிழவர்கள் இம்மாதிரி செய்யின், உடனே அவர்களுக்கு மரணம் சம்பவிக்கும். இது விஷயத்தில்

# சுகாதாரக் குறிப்புக்கள்

## நோய் அணுகா விதி

எல்லா நோய்களையும் அண்டவொட்டாமல் தடுக்க எவராலும் இயலாதெனினும், தேகசௌக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தகுதியான வகையை யாவரும் தெரிந்துகொண்டால் பல வியாதிகளைத் தலையெடுக்க வொட்டாமல் இயன்றவரை தடுக்கலாமன்றோ? இவ்வாறு தடுக்கப் பல வழிகள் உண்டு. அவற்றுள் சில வருமாறு:—

1. தரைமட்டத்திற்குத் தாழ்வாய் இராததும், தண்ணீர் ஊறித் தங்காததும், வருஷத்திற்கிருமுறை வெள்ளையடிக்கப்பட்டதும், காற்றோட்டத்திற்குப் போதுமான பலகணிகள் பல கொண்டதும், துர்நாற்றமுள்ள குப்பை முதலிய அசுத்தங்களால் சூழப்படாததுமான வீட்டை வசிப்பிடமாகக் கொள்ளல் வேண்டும்,

---

அரேபியர் பழக்கம் மிகவும் மெச்சத்தக்கது. அரேபியர் எப்போதும் ஊர் ஊராய்த் திரியப்பட்டவர்கள். காடுகளிலும் பாலைவனங்களிலும் நல்ல வெய்யலில் செல்வார்கள். தாகத்திற்கு ஜலம் இருந்தால் அவர்களுக்குப் போதுமானது. ஆகிலும் அவர்கள் ஜலத்தைப் பருகுவதில்லை. போஷணையுள்ள ஆகாரம் எங்கே தவறிப் போய்விடுகிறதோ வென்று, உடனே பேரீச்சம் பழத்தை உண்ண ஆரம்பிப்பார்கள்.

ஆனதுபற்றி எப்போதும் ஜலத்தை படுக்கையைவிட்டு எழுந்தவுடனேயும், படுக்கப் போகும்போதும் பருகவேண்டும். தாராளமாய் ஜலத்தைப் பருகவேண்டியது அவசியம்தான். ஆனால் வேளை தப்பி வேளை சாப்பிடக்கூடாது. காலையில் வெறும் வயிற்றில் ஜலத்தைப் பருகினால், அது மலத்தைத் தள்ளி தேகத்தை சுத்தம் செய்யும், வெந்நீர், இரைப்பைக்கு போஷிப்பாயிருக்க, வெத வெத வென்றிருக்கும் நீரைக் குடித்தவுடன் வாந்திக்கு வரும். தேகத்தில் விஷம் இருப்பதாக சந்தேகம் இருக்கும் பக்ஷத்தில், டாக்டர் வரும் வரையில், வாந்தி யெடுக்க இம்மாதிரி ஜலத்தைக் கொடுக்கலாம். இவ்வாறு மேலுக்கும் உள்ளுக்கும், ஜலம் முக்கியமானது. அதை சரியாக உபயோகப்படுத்தினால் அது அநேகவித வியாதிகளைத் தீர்க்கும். ஜல சிகிச்சை முறைப்படி, நல்ல ஜுரத்திலும் வெய்யிலடியில் வருந்தும் ஜனங்களுக்கும் இது வெகு உதவி யாயிருக்கும்.

2. அந்தத் தேசத்திற்கும் அவ்வக்காலத்திற்கும் ஏற்ற ஜீரணிக்கத்தக்க சுத்த போஜனத்தையும் அழுக்கில்லாத தெளிந்த காய்ச்சின நீரையும் அருந்தவேண்டும்.

3. அவயவங்களில் அழுக்கேருதபடி தேய்த்துக் குளித்துத் தோய்த்துலர்ந்த மாசிலா உடையைத் தரிக்கவும், தீண்டத் தகாத மனிதரையும் மிருகங்களையும் பொருள்களையும் தீண்டாமல் இருக்கவும் வேண்டும்.

4. வியாதிகள் மிகுதியாய் பரவக்கூடிய காலங்களில் அவை அணுகாதபடி வீட்டை வெள்ளையடித்து செங்கல் தரையையும் மண்தரையையும் பசுவின் சாணங்கொண்டு மெழுகவேண்டும்.

5. பகற்பொழுதும் அந்திப்பொழுதும் தூங்காமற் ஜாமத் துறங்கி வைகறையிற் றுயிலெழல் வேண்டும்.

7. சனிபுதன் தனில் எண்ணெய் வெந்நீரில் மூழ்குவார்
சாருமிள வெயில் விரும்பார்
*  *  *  *

சதாகாலம் வழியில் நடவார்
பனியினும் காற்றிலும் மெய்வருத்தார் மடைப்
பள்ளையிற் சேவகமிரார்
பழங்கறி யருந்தார் இரண்டடக் கார்
*  *  *  *

கனியொடு கிழங்குகள் மிகுந்த புசியார் பல
கலந்தன்றி யுணவு செய்யார்
மனிதரிவர் பேர் சொன்னபேர்க்கு நோய்வருகுமோ.
*  *  *  *

என்பதைச் சிந்தித்து ஒழுகவேண்டும்.

8. ஆறுமாதத்திற் கொருமுறை வாந்தியாகும்படியாகவும், நான்குமாதத்திற் கொருதரம் பேதியாகும்படியாகவும் மருந்துண்ண வேண்டும்.

தம்மாலியன்ற அளவு முற்கூறியவாறு வியாதிகளைத் தடுத்தும் நோயணுகுமானல் அக்காலத்தும், தாமே தமது அறியாமையாலும் அறிந்தவழியும் அஜாக்கிரதையினலும், நோய்வலியத் தேடிக் கொண்ட காலத்தும், வியாதியஸ்தர்கள் தமது நோயின் நிலைமையைச் சிறிதும் ஒளியாமல் உடனுக்குடனேயே உள்ளபடி வைத்தியருக்குக் கூறி அவர் விதிக்கும் பத்தியத்தையும் ஔஷதத்தையும்

# பொய்யா மொழிப்புலவர்

இவர் துறையூரிலே வேளாளர் குலத்திலே அவதரித்துத் தமிழ்ப்புலமையும் சாபானுக்கிரகமும் பெரிதுமுடையராய் விளங்கியவர். அழிந்துபோன தமிழ்ச்சங்கத்தை மீளவும் அமைத்து வளர்த்தல்வேண்டும் என்னும் பேரவாவுடையராய் வணங்கா முடிப் பாண்டியன்பாற் சென்றவர். அவன் இவர் கருத்தை யுசாவியுணர்ந்து சங்கங்கூட்டுங் கருமத்தைப் பின்னர் யோசிப்பாம்; இப்போது நமது சிவாலயத்தினுள்ளே ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் சங்கப்புலவர்களது விக்கிரகங்களெல்லாம் தலை துளக்கும்படி பாடும் பார்ப்போமென்றான். உடனே இவர்,

உங்களிலே யானொருவ னொவ்வேனோ வல்லேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரே''

என்னும் வெண்பாவைக் கூறுதலும் அவ்விக்கிரகங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்தன. இவ்வற்புதத்தைக்கண்டு மப்பாண்டியன் இவர் விண்ணப்பத்தைப் பொருட்படுத்தானாயினன். அதுகண்டு புலவர் தமது சோணாட்டை நோக்கிப் பல்லக்கேறி மீண்டார். அப்பொழுது பாண்டியன் மனைவியார் தமது பல்லக்கேறித் தொடர்ந்து போயிறங்கி இவருடைய பல்லக்குச் சுமப்போருளொருவராயினர். அஃதுணர்ந்த புலவர், "நீ நமக்குப்பல்லக்குத்தாங்கப் புகுந்த கருத்தையுணர்ந்தோம். நாம்வெகுண்டு அரசனை முனிவாமல்லேம். அஞ்சற்க'' வென்று அவ்வுத்தமியைத் தடுத்து,

உமையாளு நீயு மொருங் கொப்பே யொப்பே
உமையாளுக் கங்குண்டோ ரூனன்—உமையாடன்
பாகந் தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டா ரணங்கு''

---

பத்தி விசுவாசத்துடன் கொண்டு அபத்தியத்தை விலக்கவேண்டும். இங்ஙனமே ஒழுகினல் சுகசரீரியாக வாழலாமென்பது திண்ணம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதனல் நோயுற்றவர் வாழ்வு நிறைவுற்றதாயினும் குறைவுற்றதே யென்பது, நோயற்ற வாழ்வு வறுமையுற்றதாயினும் அதுவே, குறைவில்லாத பெருஞ்செல்வ வாழ்க்கையா மென்பதும் நன்கு விளங்கும்.

என்று வாழ்த்திப் போயினர்.

இவர் சோழராஜாவினது மந்திரியாகிய சீநக்கராயனுக்குப
பிரியா நட்பினர். ஒருநாள் சீனக்கராயன் சயனிக்குங் கட்டிலிலே
அவனுப புலவருமாக விருந்து, பொழுது போய பின்னர், நெடு
நேரம் அளவளாவிக் கொண்டிருக்கையில் புலவர் தமக்கு நித்திரை
வந்த தென்று கூறிராயனைப் போசனத்துக்குப் போகுமாறு செய்து
அக்கட்டிலிற் றானே ஒருபக்கமாக நித்திரைபோயினர்.

ராயன் போசனம் முடித்துக்கொண்டு நிலாமணிமேடையிற்
சென்று சிறிதுநேரம் போக்கி மீளுமுன்னே ராயன் மனைவியும் அக்
கட்டிலிற் படுத் துறங்குகின்றவரைத் தன் கணவனென்றெண்ணி
ஒரு பக்கத்திற் படுத்து நித்திரைபோயினர்.

அதன் பின்னர் ராயனும்போய்ப் படுத்துறங்கினான். வைகறை
யிலே புலவர் முதலிலே யெழுந்தார் அவ்வரவங்கேட்டு ராயனும்
எழுந்தான். புலவர் தம்மருகே ராயன் மனைவி படுத்து நித்திரை
போதலைக்கண்டு துணுக்குற்று ராயனை நோக்கி "என் செய்தாய்!
என் செய்தாய்!" என்றனர். ராயன் அவரை நோக்கி "அஞ்சாதிர்.
இப்போ தெழுந்திருக்க வேண்டாம், செல்லக்கிடமின்" என்றான்.
மனைவி அவ்வொலி கேட்டுப் பதைத் தெழுந்தோடி அந்தப் புரஞ்
சென்றாள்.

ராயன் புலவரை நோக்கி "என்மனையாளை மாத்திரமன்று, உல
கத்துப் பெண்களெல்லோரையும் மாதாவெனக்கொண்டு போற்று
கின்ற உம்பக்கத்திலே என்மனையாள் படுத்துறங்கியதைப் பெரும்
பாக்கியமாகக் கொண்டேன்" என்றான். அன்று முதலாகப் புலவ
ரும் ராயனும் ஈருடலும் ஒருயிரும் போன்றொழுகினர். இவர் சீநக்க
ராயன் இறந்தபோது சோழன் தடுக்கவுங் கேளாமல் மேல் வருங்
கவிகளைக் கூறி உடன்கட்டை யேறினர்.

"வாழி சோழவென் வாய்மொழி கேண்மோ
ஊழி நிலவெறி மாளிகை யின்வயிற்
கட்டிலங் கணவன் கவின் பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில் கொளச்
செல்லக் கிடமி னெனக்கிடந் தரு கெனைச்
சொல்லிய நண்பன் றனிச் செல்பவனோ
நானு மேகுவ னற்றுணை யவற்கே.
அன்று நீ செல்லக் கிட வென்றா யாயிழையோ
டின்று நீ வானுலக மேறினாய்—மன்றல் கமழ்
மானோக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக்கிட"

இப்புலவர் பெருந்தகையே தஞ்சை வாணன் கோவை என்னும்
பிரபந்தம் பாடியவர். அக்கோவையினது சொல்லாற்றல்கள் தமிழ்ப்
புலவர்களைப்பிரமிக்கச்செய்வன வென்றால் மற்றினிக்கூறுவதென்னை.



இவர் தொண்டை நாட்டிலுஞ் சிறிது காலம் வசித்தவரென்
பதும், அக்காலத்திலேயே முருகக்கடவுள் வாயால்," விழுந்ததுளி
யந்தரத்தே வேமென்னும் தொண்டைமண்டல சதகத்தால் விளங்கு
கின்றது இவர் அதிவீரராம்பாண்டியன் காலத்துக்குச் சற்றுமுன்னே
யிருந்த வணங்காமுடிப் பாண்டியன் காலத்தவராதலின் இவர் காலம்
சற்றேறக்குறைய ஆரம் வருஷங்களுக்கு முற்பட்டது என்னலாம்

## திப்புவின் தலைப்பாகை

சரித்திர பூர்வமானதும், விசேஷ விலை மதிப்பானதுமான இந்
திய ஞாபகச் சின்னங்களில் பல இந்தியாவின் கரையை விட்டுப்
போயிருக்கின்ற துயரக் கதையை நாம் அறிவோம். மொகலாய சக்
கரவர்த்திகளின் கோஹினூர் வைரமும், மயிலாசனமும் இன்று
முறையே சீமையிலும், பாரஸீக நாட்டிலு மிருந்து வருகின்றன.
சிவாஜிக்கு அன்னை பவானி அளித்த வீர வாள் இன்று பிரிட்டிஷ்
மியூஸியத்தில் சிறைப்பட்டுக் கிடக்கிறது. தன்னுடைய புராதன மன்
னர்கள் உபயோகித்து வந்த அபூர்வமான வஸ்துக்களைத் தன் தேச
மக்கள் கண்டு மகிழும்படி தன்னிடமே வைத்துக் கொள்ள ஒவ்
வொரு தேசத்திற்கும் உரிமை யுண்டு. ஆனால் தன்னுடைய ராஜீய
உரிமைகளுடன் இந்தியா இந்த உரிமையையும் இன்றுஇழந்து கிடப்
பதால் எவ்வளவோ சரித்திர சம்பந்தமான அரிய பொருள்களை
இழந்து வருகின்றது.

மேற்படி பொருள்கள் மட்டும் தான் இந்தியாவை விட்டுச்
சென்றதாக நினைக்க வேண்டாம். ஏனெனில் மைசூரை ஆண்ட திப்பு
சுல்தானின் சிகப்புத் தலைப்பாகையும் இப்பொழுது சீமையிலேயே
இருப்பதாகச் செய்தி கிடைத்துளது. சாகும் வரையில் இந்தத் தலைப்
பாகையும் இப்பொழுது சீமையிலேயே இருப்பதாசச் செய்தி
கிடைத்துளது. சாகும் வரையில் இந்தத் தலைப்பாக திப்புவின் தலை
யை அலங்கரித்து வந்ததாம். பின்னர் இது ஸ்ரீரங்கப்பட்டணத்தை
விட்டு சீமைக்குப் பிரயாணமான கதை தனிப்பட்டது. ஸ்காட்ச்
ராணுவப் படையைச் சேர்ந்த ஹ்யூ மிச்செல் என்ற போர்த் தலைவ
னிடம் அது அகப்பட்டுக் கொண்டதாம். கொஞ்ச நாட்களுக்கு அந்
தத் தலைப்பாகையை யணிந்து அவன் "நான் தான் திப்பு" வென
அட்டகாசம் பண்ணினானோ என்னமோ தெரியவில்லை. அந்த மிச்
செல் இன்று இல்லை. அவனுடைய சந்ததியார்களில் ஒருவளாகிய
எடின்பரோவிலுள்ள மிஸஸ். இங்கிளிஸ் என்பவள் சமீபத்தில் தான்
அதை லண்டன் நகரிலுள்ள "இந்தியா ஹவுஸ்" பொருட்காட்சிச்
சாலைக்கு வழங்கினாளாம். கோஹினூரையும், மயிலாசனத்தையும்,
சிவாஜியின் வீர வாளையும், திப்புவின் தலைப்பாகையையும் இவை
போன்ற இன்னும் எண்ணற்ற நமது சரித்திரச் சின்னங்களையும் ஸ்வ
தந்திர இந்தியாவில் தான் நாம் மீண்டும் காண முடியும் அல்லவா?

# குயவன் குறும்பு

தென்னாட்டிலே ஓர் அரசன் இருந்தான். அவனுடைய அரண்மனை வண்ணானுக்கும் குயவனுக்கும் பகை உண்டாயிற்று. உண்டாகவும் குயவன், அவனிடத்திற் சென்று, மகாராஜாவே, அரண்மனையிலே எல்லோரும் பட்டும் பீதாம்பரமும் உடுப்பவர்களாய் இருக்கிறார்கள். அதனாலே வண்ணானுக்கு வேலை மிகக் குறைவாயிருக்கின்றது; அவன் சும்மா திரிந்துகொண்டே வீண்சம்பளம் வாங்குகிறான். மகாராஜாவினுடைய அலங்காரத்துக்குக் குறைவு செய்வது மகாராஜாவினுடைய யானை ஒன்றே. அதனை வெளுத்து வெள்ளையாக்கிவிட்டால், மகாராஜாவினுடைய அலங்காரத்துக்குப் பெருஞ் சிறப்பாகும்,'' என்றான்.

அச்சர்ப்பனையை அறிந்த அரசன், குயவனுக்குப் புத்திபடிப்பிக்க எண்ணி, வண்ணானை அழைத்து, "நமது பட்டத்து யானையை எட்டுநாளைக்குள் பால்போல் வெளுத்துக் கொண்டுவந்து தரக்கடவாய்'' என்று சொன்னான். வண்ணான் அப்படியே பட்டத்து யானையைக் கொண்டுபோய்த் தன் வீட்டிற் கட்டிவைத்தான். பின்பு வண்ணான், இக்கேட்டினைத் தேடித்தந்த குயவனுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று எண்ணி அரசனிடம் சென்றான். அரசன் வண்ணானை நோக்கி, ''நீ எங்கு வந்தாய்''? என்று வினவினான். 'வண்ணான், மகாராஜாவே, யானையை வைத்து வெள்ளாவி வைக்கத்தக்க சால்ஒன்று தரும்படி குயவனுக்குக் கட்டளையிட வேண்டுகிறேன்'' என்று வேண்டினான்.

அரசன் அப்படியே அதனைச் செய்துகொடுக்கும்படி குயவனுக்குக் கட்டளையிட்டான். குயவன், ஐயோ கெட்டேனே! கெட்டேனே! அறியாமல் தேடிக்கொண்டேனே! சால் கொடாவிட்டால் அரசன் என் தலையை வாங்கிவிடுவான். யானைக்குச் சால் செய்ய யாரால் ஆகும்?'' என்று சொல்லி, அரசனிடஞ் சென்று தான் செய்த பிழையை மன்னிக்கும்படி வேண்டி, அரசன் மன்னிப்பைப் பெற்றான்.

# காதல்

[ஸ்ரீமதி, அரங்கநாயகியம்மாள். கோயமுத்தூர்.]

இச்சொல்லைக் கேட்டமாத்திரத்தில் சிலருக்கு அருவருப்புண்டாகிறது. சிலருக்கு என்று மில்லா ஆனந்தம் உண்டாகிறது. சிலருக்கு மனவெழுச்சி பெருகி வழிகின்றது. இதன் காரணம் யாது என ஆராய்வாம். காதல் என்ற மாத்திரத்தில் ஆண், பெண் என்ற இரண்டு உருவங்கள் தென்படுகின்றன. உலகிலுள்ள பொருள்களெல்லாம், ஆண் பெண் என அமைக்கப்பட்டு இவ்விரண்டுங் கூடித்தம்மேபோல் மற்றொரு உருவத்தைத் தோற்றுவிக்கின்றன. ஒன்று என்ற எண்ணிலிருந்துதான் அதன் கீழ் வரையப்படும் இரண்டு மூன்று, நான்கு எனப்பல எண்கள் தோன்றுகின்றன. இவ்வெண்கள் ஒருவரையறைக்கு வந்தவுடனே, ஒன்றாய் விடுகின்றன. இவ்வாறு ஒன்று இரண்டை யுண்டாக்கி, இரண்டு மூன்றையும்; மூன்று நான்கையும், இப்படியே மிகப் பலவாய் ஒன்றோடொன்று சேர்ந்து பலவாகி நின்றும் மறைந்தும் போய்க்கொண்டிருக்கின்றன. ஆயின் ஒன்று எங்ஙனமுண்டாயிற்று யார் உண்டாக்கியவர். அவர் இரண்டினின்றும் வந்தவரா அல்லது ஒன்றாகவே இருப்பவரா என்ற சங்கைகள் நிகழ்கின்றன. இதற்கு விடை ஒன்றுமாய் இரண்டுமாய் இவற்றை ஆக்கியும் அளித்தும் அழித்தும்வரும், தோன்றாப் பொருள் ஒன்று உளது. அதை காதல் என்றால் அவர்களுக்கு ஏறுமா? உண்மைக் காதல் ஒருவனுக்கு இல்லையேல் சாதல் மிக நன்று என நம்புவார்களா? ''இல்லற மல்லது நல்லறமன்று'' என்றது இந்த உண்மையாலன்றோ! எவ்வாறெனில் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது, அரிது காண்'' என்றவாறு இம்மானிடப் பிறப்பில், நாம் அடையப் பெறுவது யாதெனில் இரண்டு அறக்கலந்து ஒன்றாய் நிற்பதன்றோ, இவ்வுண்மையை, உண்மைக் காதலால் கட்டுப்பட்ட தலைவன் தலைவியரிருவர் தங்கள் ஆனந்தக் களிப்பில் மூழ்கி லீலா விநோத இன்ப சாகரத்தில், மூழ்கிக் கிடக்கும் போதில் அவர்கள் இருவர்மனதையும் இவ்வாறு இருக்கும் என்று வருணிக்க முடியுமா. அச்சமயம் அவ்விரண்டு உடல்களை யார் என்ன செய்தாலும் அறிவார்களா. அப்போது அவர்கள் எங்கிருக்கிறார்கள்?

இத்தகைய வினாக்களைப் போட்டுப் பாருங்கள். உண்மை விளங்கும். இத்தகைய மனதையே கடவுளிடத்தில் யாம் செலுத்திக் கடவுளிடம் ஒன்றாய்க் கலக்கவேண்டும் என்பது உண்மையல்லவா. அப்படிக் காதல் செலுத்தி ஈஸ்வரனிடத்தில் இரண்டறக் கலந்து அப்பர் பாடிய பாட்டல்லவா.

"காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கி," என்ற அழகிய தேவாரப்பதிகம்.

எனவே, இத்தகைய பேரின்பத்திற்குத் தினந்தோறும், நம்மை ஒரு சில விநாடிகளாவது "சிந்தையை யடக்கவழிகாட்டிவரும், நமது சத்திரூபமான பெண்களை எவ்வாறு வைத்திருக்கின்றோம்.

"கண்களி ரண்டினில் ஒன்றைக்—குத்தி
காட்சி கெடுத்திடலாமோ
பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம்
பேதமை யற்றிடுங் கண்டீர்"

என்ற பாரதியாரின் வேத வாக்கைக் கவனியுங்கள். ஆண் பெண் என அமைக்கப் பெற்றிருக்கும் இரண்டு கண்களில் ஒன்றைக் குத்திவிட்டு ஒரு கண் வெளிச்சத்தில் ஒருவன் எவ்வளவு சிறப்பாக வாழ முடியுமோ, அதேமாதிரிதான் நாம் பெண்களின் ஞானக்கண்களைத் திறக்க வொட்டாமல், குத்திவிட்டுக் கல்வியறிவில்லாத பெண்மணிகளை கேவலம் மிருக இச்சையுடன், மக்களைப் பெறும் இயந்திரங்களாக பாவித்து தாழ்ந்த நிலையில் நடத்திவருகிறோம். இது மிகவும் தவறு.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்"
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாருமறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பரே"—(திருமூலர்)

என, அந்த ஒன்று என்ற பொருளையே "அன்பு" என்றனர். அதுவே காதல், அதாவது, இருபொருள்களுக்குள்ளும் முதிர்ந்து வெளிப்படும் ஒரு சத்தி. இதை முக்கியமாய் ஆண், பெண் என்று இருவர் மனமும் ஒன்றுபட்டுயர்வதிலிருந்து ஒன்றை அறியலாம். இதையே, சிவமன்றிச் சக்தியில்லை சத்தியின்றிச் சிவமில்லை, என்றனர் பெரியோர். சற்று நுட்பமாய் ஆராய்ந்தால் சிவம் சக்தியை இடப்பாகத்திலும், நாராயணன் லக்ஷ்மியை மார்பிலும், பிரமன் சரஸ்வதியை நாவிலும் வைத்திருக்கிறார்கள் என்ற உண்மை விளங்கும்.

மிருக இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதே "காதல்" என்றும் உயிர்ப்பாதுகாப்பிற்கு ஒன்றுமில்லாது உடற்பாதுகாப்பை



யே பெரிதென்று நினைக்கும் நாம், எவ்வாறு காதலின் ரசத்தைக் காட்ட முடியும்? உயிர்க்கு குறுதியாக்குவதுவே காதல் என்ற நிச்சயம் ஏற்படுமேல் உலகின்கண் கற்பின் நீங்கிய மக்களும் மகளிரும் தோன்றார்.

காதலின் உண்மை புறக்கணிக்கப் படுவதேன்?

தற்கால உலகில், பெண்கள் மிருகங்களென எண்ணி; அவர்கள், ஆண்மக்களுக்கு அடிமைப்பணி செய்யவே அவதரித்தவர் என்ற எண்ணம், உயர்ந்தோரிடத்தும், தாழ்ந்தோரிடத்தும், கற்றோரிடத்தும், கல்லாரிடத்தும், பெரியோரிடத்தும், சிறியோரிடத்தும் சர்வ சாதாரணமாய்த் தோன்றிவிட்டது இக் கொடிய எண்ணம், உயிர்க் குறுதியை எண்ணாது, உடற் குறுதியை நாடிப் பொருள்தேடுவதற்கு ஏற்ற மிருகத்தன்மை நிறைந்த போலிக் கல்வியைக் கற்பதனாலே தோன்றியது.

நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்
நீசத்தொண்டும் மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்பு உயர்மக்களைப் பெற்றிடல்
சாலவே அரிதானதோர் செய்தியாம்" (பாரதியார்)

நிலத்தின் தன்மை போல பயிர் செழித்தும் சிறுத்தும் வளர்வதேபோல், அடிமைத்தொண்டு வேலை செய்வதே கடமையாய்க் கொண்டு அறியாமை நிறைந்ததாய், இப்பூமியில் ஆண்மையில் உயர்ந்த மக்களைப் பெற்றிடல் மிக மிக அருமை. இத்தகைய உண்மைக் கல்வியறிவில்லாத மக்களின் வீரம் குறைந்து வருவதால் காதல் களவுப் புணர்ச்சியாக மாறிவிட்டது.

களவுப் புணர்ச்சி

தற்காலம் நமது நாட்டில், இளைஞர் பலர், தத்தம் காளைப் பருவத்தில் எழும், மனவெழுச்சியால் காதலைச் சீரியவழியில் நிறுத்த வழியின்றிச் சமூகக் கட்டுத்திட்டங்களுக்கும், வீரமில்லா அறியாமைப் பேய்க்கும், அடிமைப்படுத்திவிட்டு, காதலை கொன்று, களவில் கலந்து, உண்மையைப் புறக்கணித்து, அலைந்து திரிவதைப் பார்க்கப் பார்க்க நமது மனம் புண்படுகிறது. இவ்வீரமற்ற சிறுவர்களால், புறக்கணிக்கப்பட்டு தங்கள் மானத்தைவிட்ட பெண்கள் பலர், மூடப் பழக்க வழக்கக் கட்டுதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து, பயந்து பயந்து, உண்மைக் காதலால், உதித்த கருவையுஞ் சிதைத்துக் கொலைபாதகத்து ஆளாகி அலைகின்றனர்.

காதலை நிறுத்த வீரமே வேண்டும்

பண்டைக் காலத்தமிழர்கள், ஆண்மகனும் பெண்மகளும், ஒருவருக்கொருவர் காதல் வளர்ந்து தத்தம் கருத்தைப் பெற்றோருக்குத் தெரிவிப்பர். அவர்களின் காதற் கருத்துக்குப் பங்கம் நேருமேல், ஓலையாற்செய்த குதிரையில் ஏறி ஊரைச் சுற்றிவந்து, அவ்வோலைக் குதிரைக்குத் தீக்கொளுத்தித் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளுவர். இத்தகைய வீரப்பெண்மணிகளின் சரித்திரமும், வீரக்காளையர்களின் சரித்திரமும், பண்டைத் தமிழ் நூலில் பார்க்கக் காணலாம்.

முடிவுரை

தமிழ் நாட்டில் வீரப் பெண்மக்களின் வழியில்வந்த சகோதரிகளே, சமூகக் கட்டுத்திட்டங்கள், மூடப் பழக்க வழக்கக் கொள்கைகள், இவற்றை சாதாரணமாய்த் திருப்ப இயலாது. பெரும்பாலும் எல்லாச் சமூகங்களும், போலிக் கட்டுத்திட்டங்களால், ஏழைமக்களை எவ்விதத்திலும் மேலெழ வொட்டாமல் கடவுள் தன்மையை அழித்து வருகின்றனர். இத்தீமையை, வெல்ல ஒரேவழிதான். சத்தியமே தெய்வம், தருமமே ஜயம், என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, "கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில" என்ற வள்ளுவர் வாக்கின் உண்மைப்படி, காதலைகளவாக மாற்றிக் கவலையில் அழியாமல், உண்மையில் வீரத்துடன் காதற் கலப்பு மணங்களை செய்து உலகத்தில் அறத்தை நிலைநிறுத்துங்கள்.

வீரப் பெண்மணிகளே இனி வருங்காலத்தில் நமது நாடு செழித்து நமது சமூகம் நிலைத்திருக்கவேண்டுமானால் உண்மையை மறைக்காது சத்திய வழியில் நடக்க கற்றுக்கொள்ளவேண்டும். தற்கால போலிப் படிப்பினால் மட்டும் பெண்களுக்கு நாகரிகம் வளர்ந்து விடாது.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
வீரப் பெண்கள் திறம்புவதில்லையாம்." (பாரதி)

என்றவாறு நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு, என்ற விலங்குகளை அறுத்தெறிந்து, நிமிர்ந்த நடையும் நேரான பார்வையும், வீரச் சொல்லும், நல்ல ஞானமும், உள்ளவர்களாய் தத்தம் மனவழி நடக்கக் கற்றுக்கொண்டீர்களேயானால் இந்திய நாட்டிற்கு வீரம் நிறைந்த ஆண்மையிற் சிறந்த மக்களை யளித்து அடிமையை நீக்க வழிதேடியவர்களாவீர்கள்.

# சிறு கதைப்பகுதி

எஸ். ஆர். இரகுநாதன் [சின்னப்பம்பட்டி]

## கதையும் பாட்டும்

### முதல் வகுப்பிற்கு

பிள்ளைகளே !

நாம் வருஷத்தில் ஒரு நாள், களிமண்ணால் பிள்ளையார் செய்து பூசை செய்கிறோமல்லவா ? அது உங்களுக்குத் தெரியும். எல்லா வீட்டிலும் பூசை செய்வார்கள். பிள்ளையாருக்கு இட்டலி, கொழுக்கட்டை பால் பழம் எல்லாம் படைப்பார்கள். அன்று பிள்ளையார் பிறந்த நாள் பிள்ளையார்ச் சவுத்தி என்று சொல்லுவார்கள். ஒரு ஊரில் எல்லார் வீட்டிலும் பிள்ளையார் பூசை நடந்தது. பிள்ளையாருக்கு, இலைபோட்டு, எல்லாப் பலகாரங்களும் படைத்தார்கள். பிள்ளையார் எல்லார் வீட்டிற்கும் வந்தார். எதன்மேல் ஏறிக்கொண்டு வருவார்? பிள்ளையார் கோவிலுக்கு முன்னால், ஒரு உருவம் வைத்திருக்கும். அதுதான் பெருச்சாளி, அதுதான் அவருக்கு வாகனம். அதன்மேல் ஏறிக்கொண்டுவந்தார் ஒவ்வொரு வீடாக தின்பண்டங்களைத் தின்று கொண்டே போனார். பெருச்சாளிக்கும் கொடுத்தார். 1, 2, 3, 4, 5, 6, வீடுகளில் சாப்பிட்டார். 7-வது வீட்டுக்குப் போக பெருச்சாளிக்கு நடக்க முடியவில்லை. பிள்ளையாரும் அதிகமாய்ச் சாப்பிட்டார். பெருச்சாளியும் சாப்பிட்டது. பெருச்சாளிக்கும் பெருமூச்சுவந்தது. பிள்ளையாருக்கும், மூச்சுவிட முடியவில்லை. அசைந்து அசைந்து வந்தார். பெருச்சாளி கால் தடுமாறி, விழுந்தது. பிள்ளையாரும் விழுந்தார். ஏன்? அதிகமாய்ச் சாப்பிட்டதால். ஆகையால் நீங்கள் அதிகமாய் அளவுக்கு மீறிச் சாப்பிடக்கூடாது.

பாட்டு

பிள்ளையார் சவுத்தியில் பிள்ளைகளே,
பிள்ளையார் களி மண்ணில் செய்திடுவோம்,
கொள்ளையாய் கொழுக்கட்டை, பணியாரம்,
அள்ளியே பூசைக்கு அளித்திடுவோம்.
மெள்ளவே பெருச்சாளி வாகனத்தில்,
பிள்ளையார் வருவார் பெருமையுடன்
உள்ள தெல்லாமவர் - உண்டுவிட்டு
தள்ளியே விழுவார் தரையினிலே,
கொள்ளையாய்ச் சிரிப்போம் கூட்டமாய்
மெள்ளவேமென்று பசித்தவுடன்,
உள்ளதைத் தின்றால் ஊனமில்லை.

# குழந்தைகளின் மனோதத்துவம்

(கீ. பீ. சேஷாத்திரி அய்யங்கார்)

போதனையும் கலையினத்தைச் சேர்ந்தது

போதனை' என்பது சித்திரம், சங்கீதம் இவைபோன்ற கலையினத்தைச் சேர்ந்தது. இந்தக்கலையில், மனோதத்துவ சாஸ்திரத்தின் முடிவுரைகள், உபாத்தியாயர்கட்கும், மாணவர்களுக்கும் அனுகூலப்படும்படி உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. மனோதத்துவம் என்பது ஒரு சாஸ்திரம். அப்படியிருக்க அந்த சாஸ்திரஞானம் உபாத்தியாயர்க்கு அவசியமாகவிருக்க வேண்டியது எதற்காக என்று சிலர் கேட்கக்கூடும். அந்தக் கேள்விக்கு உடனே பதில் கூறலாகும். உபாத்தியாயர்களைப் பழக்குவதற்கு அந்த சாஸ்திரத்தின் ஞானம் அவசியம் வேண்டியது. சிறு குழந்தைகளின் கூட்டத்துடன் பழகும் உபாத்தியாயருக்கு அதன் ஞானம் மிகவும் இன்றியமையாதது. உபாத்திமைத் தொழிலில் பழகும் மாணவர்களுக்கு அந்த சாஸ்திரத்தை முழுமையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது நியதியில்லை. மனோதத்துவத்தின் ஞானம் எது வரையில் கல்விகற்பிக்கும் விஷயத்தைத் தழுவியிருக்கின்றதோ, அதுவரையிலுள்ள சில முக்கிய அமிசங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

சிறுவர்களின் மனநிலைமை

உபாத்தியாயருடைய வேலை சிறுவர்களுக்குப் போதிப்பதுதான் என்று தெரிந்து கொண்டதன் பேரில், பலவிதமான பாடங்களைச்சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்ற முறைகளையும் விதங்களையும் நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும் என்பதும் வெள்ளிடை மலையே. ஒரு வகுப்பில் சேர்ந்திருக்கும் சிறுவர்கள் ஒரே விதமாக நடந்துகொள்ளுவதில்லை. அப் பிள்ளைகள் தனித்தனியாக இருக்கும்போது நடந்து கொ[illegible]வதைப்போல வகுப்பில் நடந்து கொள்ளுவதில்லை. அப்படிப்பட்ட சிறுவர்கள் சேர்ந்த வகுப்பை எவ்விதம் உபாத்தியாயர் அடக்கி நடத்துவது என்பதை அவர் அவசியம் அறியவேண்டும். ஒவ்வொரு பையனும் உபாத்தியாயருக்கு அடங்கினவன் என்றும், மற்றப்பிள்ளைகளைப்போல் தாங்களும் சமமான ஒரு பிள்ளைதான் யென்றும் சற்று யோசனை செய்து பார்த்தால் தெரியவரும். ஒரு வகுப்பிலுள்ள



பிள்ளைகளில் ஒவ்வொருவனுடைய செய்கையும், எண்ணமும் ஒரே மாதிரியாயிராமல் பற்பல விதமாக விருக்கும். இந்தச் செய்கைகளையும், எண்ணங்களையும் எவ்விதம் சரிபடுத்துவது; இவைகளைப் போதிப்பதில் எப்படி உபயோக படுத்துவது என்பவைகளை அவர் நன்றாகத் தெரிந்துகொள்ளும் சக்திபெற்றவராகவு மிருக்கவேண்டும்.

கல்வியின் பயன்

கல்வியின் பயன் நன்னடத்தையைப் பிள்ளைகளுக்கு உண்டாக்குவது தான். கல்வி கற்பது என்பதில் போதனையும் அடங்கியிருக்கின்றது. கல்வி என்பது ஒரு முழுவஸ்து; அதில் ஒரு பாகம் போதனை என்பது. போதனை, புத்தி விசேஷத்தையும், விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியையும் விருத்தி செய்யும் நோக்கங் கொண்டது. ஆனால் கல்வி கற்பதே இதைவிடச் சிறந்த நோக்கங்களைக் கொண்டது. அப்படிக் கிடைத்த விஷயங்களையும், புத்தி சாதுர்யத்தையும் எவ்விதங்களில் தனக்கும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பயன்படும்படிச் செய்வது என்பதைக் கல்வி தான் ஒருவனுக்குக் கற்பிக்கும் சக்திபெற்றது கல்வி கற்றதன் பயனால் நன்னடத்தை ஒவ்வொருவனுக்கும் உண்டாகின்றது. ஒருமனிதன் பேசும் மாதிரியும், காரியம் செய்யும் விதமும், தன் பந்துக்களைப் பாராமரிக்கும் தன்மையும், தன் நண்பனுடன் இணங்கும் நேர்மையும், இவைகள் எல்லாம் கல்வியின் பயனால் உண்டாகின்றது.

“கல்வியின் முக்கிய நோக்கம் நம்மை வாழ்க்கையில் நலம்பெற்றிருக்கச் செய்வது தான். அவ்விதம் நலம்பெறுவதற்கு நாம் நமது தேகத்தை ஆரோக்கிய திடகாத்திரத்துடன் வைத்துக் கொள்ள வேண்டிய முறைகள் எவையென்றும்; நமது மனோ நிலைமையைத் தவறவிடாமலிருக்க வேண்டிய வழி இன்னதென்றும்; நமது லௌகிக விஷயங்களை நடத்தும் மாதிரி இப்படி யென்பதையும்; நமது தேசத்துக்கு எவ்விதம் உபகாரம் செய்ய வேண்டும் என்பதையும்; எவ்வெவ் விதங்களில் நாம் வாழ்க்கையில் சந்தோஷங்கொண்டு இருக்கலாம் என்பதையும் நமக்கும் நமது அயலாருக்கும் உறவினர்களுக்கும் நாம் எவ்வெவ் விதங்களில் உதவி புரியலாம் என்பதையும் விளக்குவது தான் கல்வியின் முக்கிய நோக்கம்” [ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர்.]

உபாத்தியாயருடைய வேலை முக்கியமாய்ப் போதிப்பது; ஆனால் அதோடு அவருடைய வேலை முடிந்து விடுகிறதில்லை. அவருடைய வேலை இது வரைதான் என்று வரையறுக்கக் கூடாததாயிருக்கிறது. அதற்குப் பதிலாகப் பிள்ளைகளிடத்தில் அக்கரையையும், சிரத்தை

தையும் உண்டாக்கி, அவர்களை நல்ல நடத்தையையும், குணத்தையும், பெறப்பழக்க வேண்டும். இதை எவ்விதம் செய்வது? பிள்ளைகளுக்கு நன்னடத்தையை உண்மையில் விருத்தி செய்ய வேண்டுமென்று உபாத்தியாயர் எண்ணுவாரானால் அவர் பிள்ளைகளின் மனோ தத்துவ சாஸ்திரத்தை அறிந்திருக்கவேண்டும். மனோதத்துவத்தைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் அவர்களுக்குக் கல்விகற்பிக்கப் பிரயத்தனப் படுவது மிகவும் அபாயகரமானது. குழந்தைகளின் மனதின் போக்கையும் தத்துவத்தையும் நன்கு உணராது, சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க முயலும் உபாத்தியாயர், யந்திரங்களின் போக்கையும் விஷயத்தையும் அறியாமல் வெகு வேகமாக ஓட்டிச் செல்லும் மோட்டார் வண்டிக்காரனுக்கு ஒப்பாவார். மனோதத்துவ சாஸ்திரந்தான், சிறுவர்களின் மனப்போக்கைப்பற்றிய விஷயங்களைத் தெரிவிக்கின்றது. நம்முடைய குழந்தைப் பருவத்தில் நாம் செய்த சில செய்கைகளை நினைத்துப் பார்ப்பது நல்லது.

*மனோதத்துவத்தின் ஞானம் அவசியம்*

மனிதனின் மனப்போக்கு மிகவும் சிக்கலானது. ஆனால் குழந்தைகளுடையதோ வெனின் அது முதல் முதலில் தெளிவாக விருந்து நாளடைவில் விருத்தியாகி அதிகரித்து மிகவும் சிக்கலாகின்றது. எந்த இரண்டு குழந்தைகளும் குணத்தில் ஒத்திருப்பதில்லை. ஒவ்வொரு குழந்தையின் குணத்தைத் தனித்தனியாக உபாத்தியாயர் தெரிந்து கொள்ளவேண்டும். குழந்தைகளின் மனப்போக்குக்கும் சிரத்தைக்கும் தகுந்த விதமாக உபாத்தியாயர் விஷயங்களைப் போதிக்க முயல வேண்டும். புராதன காலங்களில் ஆசாரியர்கள் மனோதத்துவ சாஸ்திரத்தைக் கற்காமலேயே குழந்தைகளுக்கு நன்றாக விஷயங்களைக் கற்றுக்கொடுத்து கீர்த்திபெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய வெற்றிக்குக் காரணம் என்னவென்று யோசித்துப் பார்ப்போமானால், பின் வரும் விஷயங்கள் என்று தெரியவரும். அவர்கள் தங்கள் வசம் கல்விகற்கும் மாணவர்களிடத்தில் அத்யந்த அன்பும் ஆதரவும், அக்கறையும் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு மாணவனுடைய மனப்போக்கைத் தெரிந்துமிருந்தார்கள் அவர்களுடைய மனப்போக்குக்குத் தகுந்த மாதிரி அவர்கள் கல்வி கற்பிக்கும் முறையைக் கையாண்டு வந்தார்கள்.

*பூர்வீக ஆசாரியர்கள் மனோதத்துவம் தெரிந்தவர்கள்*

(தொடரும்)

# உதய குமாரன்

## (வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்)

## ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன்தொடர்ச்சி)

### அசோகவனம்

சிவோதயன்:—வேட்டையாடி நீர் வேட்கை மிகுதியால் இத்தனைக் காவதங் கடந்துவந்தது மிகவும் நன்றே. சந்தனமும், ஷண்பகமும், தேமாவும், தினபலாவும், ஆசினியும், அசோகமும், மௌனலொடு மணங்கமிழ்ந்த பாதிரியும் செறிந்து பொலிதருமிச் சுனை நீர் எத்துணை இனிப்பாகவுள்ளது. நம் தாகவிடாயும் தீர்த்தது. முளையினை ஞாயிற்றின் விரிகதிரொளிப்பது சிறிது ஆற்றிப்போதும். (என்று பொழில்வழி நடந்து வருதல்) என்ன! அன்னப்புள் செறிந்த வயலும் வாவியும் சூழ்ந்த இவ்வெற்பில், ஓர் கற்பகத்தருவின் பக்கலில் ஓர் பசும் பொற்கொடி புயலைத் தாங்கிப் பிறையையணிந்து, பொருவில்லுடன், கயலை மணந்த கமல மலர்ந்து என்கண்ணெதிரே நிற்கின்றது. இது கொடியோ அல்லது பெண்ணோ (சிந்தித்தல்) அல்ல இது பெண்ணே. இவள் வனப்பின் சிறப்பை நோக்கிப் பொழிலறுகின்றலைக்காணின் இவள் பாரணங்கோ, இவள் நிற்குமிடம் பசும் பொற்றகுடு வேய்ந்து மரகத விளிம்படுத்த மாணிக்கச் சுனையருகு சண்பகம், பாதிரி வகுளம், அசோகு, சந்தனம் முதலிய தருக்கள் மலர்ந்த பூ நாறு கொழு நிழற் கீழ் ஓர் கற்பகத்தைச் சார்ந்து பணிக்குப் பாறைமேல் கோலக்கலாபம் விறித்து மயிலாட நோக்கி நிற்கின்றாளா கருப்பாற் கடலீன்றெடுத்த பங்கேருகத்தின் ஒப்பிலாத தெய்வப் பெண்ணோ, வெற்பிடத்து நிற்றலின் வரையரமகளோ, சுனை நீர ருகுநிற்றலின் நீரரமகளோ, என்ன? அல்ல, அல்ல, இவ்வணங்கு கருங்குழலிற் சூடிய செம்மலர் வாடின, மையுண்ட அவள் கண்கள் வருகு நரைவாவென அழைப்பபோல இமைக்கின்றன. ஆதலால் இவள் ஓர் புவியணங்கே யாவள்.

**சயிந்தை:**—காதலனைக் கண்டு அவள் இச்சை மனதிற்கொண்டு, காதலுற்ற பார்வை செலுத்தித் தலைகுனிதல்.

**சீவோதயன்:**—(சற்றருகே நெருங்கிவந்து) பெண் கொடியே! யான் இப்புனத்திற்கு மிகவும் புதியேன் ஒரு காலும் வந்தறியேன். இப்போது தனியாக வந்தேன். நீ வாழும் பதி யாது? யான் செல்லும்படிச் சொல்லுவாய்.

**சயிந்தை:**—நாணத்தால் தலைகுனிந்து சும்மா விருத்தல்.

**சீவோதயன்:**—அங்கயற் கண்ணாய்! நீ என் கூற்றுக்கு விடையருளாவிடினும் நின்பதியின் பெயரையாயினும் சொல்லியருளாயோ.

**சயிந்தை:**—சும்மா விருத்தல்.

**சீவோதயன்:**—மடவன நடையாய் என்பகைவனான மதனன் எய்த கணை தைப்பவோர் கலைமான் மெய்சோர்ந்து இனத்தைப் பிரிந்து பெருமூச் செறிந்து புல்லருந்தலுமின்றி நின் புனத்தயலில் வந்த துண்டோ.

**சயிந்தை:**—(தலையைத் தூக்கிப் பார்த்து) அடிதோழி! இவர் யாவர்? இவர் இவண் வந்து முன்புபயின்றவர் போல் நடித்துப் பின்னர் துணிபெய்தி நின்பதியின் பெயர் என்னென வினாவிப் பின்னர் மதனன் கணை தைத்ததோர் கலைமான் வந்ததாவென்றார்.

**தோழி:**—அம்ம! இவரை நோக்குங்கால் ஓர் அரசிளங்குமாரராகத் தோற்றுகின்றது. மெய்சோர்ந்து வந்திருப்பதைக் காணில் வேட்டையாட வந்ததாகவும், வந்தவிடத்து அவர் கணை தைத்ததோர் கலை மானைத்துரத்தித் தன்னுடன் வந்தவர்தமைக் கையகன்று தனியே வழியறியாது இவண் வந்தவர்போலும். ஆயின் தன் கணைதப்ப வெனக் கூறாது மதன்கணை தைப்பவெனக் கூறியதால் நம்மைக் கண்டு காதலுற்றவர் போலும்.

**சயிந்தை:**—அடிதோழி! நீ அவரிடஞ் சென்று செய்தியனைத்தையும் செவ்வனே அறிந்துவா.

**தோழி:**—(செல்லுதல்) நீர் யாவர்? நும்மூர் யாது? நீர் இவ்விடம் வந்த வண்ணம் என்ன? யாவும் அறியவுரைப்பீர்.

**சீவோதயன்:**—இளநகையாய்! என் பெயர் சீவோதயன் என் வாழ்பதி நும்பதிக்கடுத்த திருப்பதி நாளும் என் நண்பர் பல



ரும் வேட்டையாட வந்தோம். இடையில் வழியிழந்து இவ்விடம் வந்தேன். வந்து நின் தலைவியைக்கண்டு மையலாம் வாளியிற்பட்டு வருந்துகின்றேன். நின் நாயகியார் என்னிடமோர் வார்த்தையாடல் ஆகாதோ.

**தோழி:**—ஐய! நீர் இவ்விடம் வருதல் ஆகாது. அங்ஙனம் வழிதப்பி வந்து என் நாயகி உம்மிடம் ஓர் வார்த்தையாடல் தகாதோவெனல் அடாது. எங்களுக்குத் தமராயுள்ளவர் இன்று வந்து காவல் செய்வர். அவர் நும்மைக் காணின் மிகவும் பொல்லாராயிருப்பர். யாம் எங்களிடம் போதும். நீரும் இங்கு நில்லாது நும்மிடம் செல்லும்.

**சீவோதயன்:**—திருவன்னாய்! நின்மயிலன்னாள் பொருட்டு நைகின்ற வென்னை, அஞ்சலென்று ஆதரித்தலொண்ணாதோ. இவ்விதம் வன்மொழியளித்தல் நின்போன்ற கன்னியர்கட்கழகோ.

**தோழி:**—அம்ம! வந்தவர் நும்பால் காதலுற்றுப் பெரிதும் வருந்துகின்றார். அவர் உயிர்க்கு விபத்துவரினும் நின்ற விடத்தைவிட்டு அகலார் போலும் இதற் கென்செய்வது?

**சயிந்தை:**—அடிதோழி! அவரைக் கண்டதும் என்மனம் அவரிடத்து லயப்பட்டுவிட்டது. கனவிற்கண்ட நாதர் இவரே. அருவத்தோடு அன்றுகண்டேன். உருவத்தோடு இன்று கண்டேன். இனி என்மனத்தகத்தில் மற்றொரு புருஷனை நினையேன். நேற்று நம்மிடம்வந்த குறத்தி சொன்னகுறி மெய்த்தது. அடிதோழி நீ சென்று இக்கணையாழியை அவரிடம் கொடுத்து அவர் அணிந்திருக்கும் அழகுபெறு மாழியைக் கழட்டிக் கொண்டுவா. போது சென்றதால் இனி இன்னும் இவ்விடம் இருத்தல் தகாது. அவரை இன்று எட்டாம் நாள் இவ்விடம் வரச்சொல்லுவாய்.

**தோழி;**—அப்படியே அம்மணீ! தந்தையார் நம்மை வீணையில் வெல்லுநர் யாரோ அவர்க்கு நம்மைக் கொடுப்பதாக பல தேசத்து மன்னர்க்கும் ஓலை போக்கி இருக்கின்றனர். அந்தப்படி நம்மை வீணையில் வெல்லுநர் எவரோ அவரே நம்மை மணக்கும்படி வேண்டியிருக்க நுங்கணையாழியைப் பெறுபவர் நம்மை வரிப்பது எவ்விதம்.

**சயிந்தை:**—எது எப்படியாயினும் சரி என்மனத்தை வென்றவத்தீரையே எத்துணையும் நான் மாலையிடுவேன். நீ சென்று

என் சொற்படி செய்துவா. நான் என்னிடம் செல்கின்றேன். நீயும் அவ்விடம் சீக்கிரமே வருவாய் (தோழி போதல்)

### துஷ்டத்தும்மன் சபை.

துஷ்டத்தும்மன் - குணாகரன் - மதனன் முதலியவரும் சபையில் வீற்றிருத்தல்.

துஷ்டத்:—குணாகர! சீவோதயன் வெளிச்சென்று மூன்று தினங்களாகியும் இன்னும் வந்திலன். அவன் அச்சினவேங்கையால் கொலையுண்டான் போலும். அவன் அப்படி ஒழிந்திருப்பின் மிகவும் நல்லதே. யான் வழிபடும் சோமசுந்தரப் பெருமானுக்குப் பெருவிழாவியற்றவேண்டியதுதான்.

குணாகரன்:—அண்ணலே! நீர் அப்படி எண்ணவேண்டாம். அவன் வீராதிவீரன் வீரமார்த்தண்டன். அவன் சென்றவன்றே அவ்வேங்கையைக் கொன்று நீர் வேட்கை மிகுதியால் தன் நண்பரைக் கையகன்று வழிதப்பிச் சென்றனனும்.

சேவகன்:—இறையே வந்தனம். தென்னவர்கோன் ஜெயகேசரி வர்மனிடமிருந்து ஓர் தூதுவர் வந்திருக்கின்றார். அவர் தம்மைக் காணவேண்டுகின்றார். இவண் அவரை வரவிடலாமோ.

துஷ்டத்:—இவ்விடம் உடனே வரவிடு (செல்லுதல்)

தூதுவன்:—மன்னர்பெரும! வந்தனம். இத்திருமுகத்தை எங்கோன் தமக்குக் கொடுத்துவரும்படியாகச் சொன்னார். மற்றபடி விசேடம் ஒன்று மில்லை. (என்று ஓலையை நீட்டுதல்.)

துஷ்டத்:—குணாகர! அத்திருமுகத்தை வாங்கிப்பார். என்ன செய்தி?

குணாகரன்:—மன்ன! தென்னன் மன்னர் ஜெயகேசரி மன்னர் தம் திருமகள் சயிந்தைக்கு இன்று ஏழாம்நாள் திருமணமென்றும். அன்று எவ்வேந்தன் அவ்வணங்கை வீணையில் வெல்லுகின்றானோ! அவனே அவளைக் கைப்பற்றுவனென்றும் அதுவிஷயமாகத் தம்மையும் அவ்விடத்து அக்காலத்து வந்திருக்கும்படியாக அத்திருமுகம் செப்புகின்றது.

துஷ்டத்:—அமைச்ச! சங்கீதக்கியானம் சற்றுமில்லாத நான் அவ்விடம் செல்வதிலென்ன பயன்.

குணாகரன்:—அரசே; அப்படியன்று நம்மையுமோர் தனிமன்னனெனக் கருதித் தமக்குத் திருமுகமனுப்பியிருப்பதால்

# பெற்றோர்களின் ஒற்றுமைப்பு

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

இன்று இப் பேரவையின் கண் சொற்பெருக்கிடுமாறு எனக்குப் பணித்துள்ள விஷயம் "பெற்றோர்களின் ஒற்றுமைப்பு" என்பதாகும். இச் சொற்றொடரைக் கேட்ட மாத்திரத்திலேயே பெற்றோர்கள் என்றால் யார்? எவரது பெற்றோர்கள்? அவர்தம் ஒற்றுமைப்பு யாருக்குத் தேவை? என்பது போன்ற வினாக்கள் எழுகின்றன. இவ் வினாக்களுக்கு விடை காணுமுன் "நீங்கள் யார்? நீங்கள் எதற்காக இங்குக் கூடி யிருக்கின்றீர்கள்?" என்பதைச் சிந்தித்தல் வேண்டும். நீங்கள் நாட்டில் ஆரம்பக் கல்வியைச் சிறுவர் சிறுமிகளுக்குப் புகட்டும் புனிதமான கடமையை மேற்கொண்ட ஆரம்ப ஆசிரியர்கள் ஆவீர்கள். உங்கள் கடமையில் வெற்றி யுறுவதற்கான துறைகளையும், முறைகளையும் ஆராய்ந்து முடிவு காண்பதற்கே மகாநாடு என்ற பெயரால் ஈண்டு குழுமி யிருக்கின்றீர்கள். ஆகவே, ஆரம்பப் பாடசாலைகளை ஆங்காங்கே நிறுவி, அறியாமையில் ஆழ்ந்துள்ள சிறுவர் சிறுமியர்க்கு ஆரம்பக் கல்வியை அறிவுறுத்தி, அம் முறையில் மக்களைக் கவர்ந்துள்ள அஞ்ஞான மென்னும் அந்தகாரத்தை யகற்றுவதற்குத் துணிந்த உங்களுக்கு ஊரிலுள்ள படிக்கும் வயது வாய்ந்த பிள்ளைகள் அனைவரையும் உங்கள்

---

தாம் போகாதிருப்பது அழகன்று. மேலும் வீரகேசரிவர்மன் நம் மன்னர் வீரமருக்கு மைத்துனராக விருந்தும் தாம் செய்த அடாத காரியத்தையும் ஓர் பொருட்படுத்தாது; நம்மையும் அழைத்தாரானதால் தாங்கள் எப்படியும் போய்வருவதே நன்று.

துஷ்டத்:—நல்லது தூதுவ! அப்படியேவருகின்றேன். நீ சென்று இது செய்தியை உன் மன்னர்க்குத் தெரிவி. [தூதுவன் போய்விடுதல்] குணாகர நீயும் சீக்கிரம் சென்று நான் நாளைப் பிரயாணப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்வாய். யானும் அந்தப்புரம் சென்று என் நாயகிக்கு இச் செய்தியை அறிவிப்பன். [யாவரும் போய் விடுதல்.]

பாடசாலைகளுக்கு வந்து கல்வி கற்குமாறு தூண்டுவதற்கு அப் பிள்ளைகளின் பெற்றோர்களின் ஒற்றுழைப்பு மிகவும் அவசியமல்லவா? ஆதலால் நகரப் புறங்களில் ஏற்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அப் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கும் வார்டுகள் என்ற பிரிவுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எனவே வயது வந்த ஆடவர் பெண்டிர் அனைவரது ஒற்றுழைப்பும், அவ்வாறே கிராமங்களில் தோன்றியுள்ள பள்ளிகளுக்கு அக்கிராமவாசிகளாகிய மக்களின் ஒற்றுழைப்பும் இன்றி யமையாததாகும். இதுகாறும் ஆராய்ந்ததன் பயனாய் பெற்றோர்களின் ஒற்றுறைப்பு என்றால் ஆசிரியர்களாகிய உங்களுக்கு உங்கள் பாடசாலையில் வாசிக்கக்கூடிய பிள்ளைகளின் பெற்றோர்களின் ஒற்றுழைப்பு என்று பொருள் காண்கிறோம்.

அவ்வாறாய பெற்றோர்களின் ஒற்றுழைப்பு அவசியந்தானா? அதனால் என்ன பயன்? அவ்வித ஒற்றுழைப்பைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டுவன யாவை? என்ற வினாக்களைக் கிளப்பி, அவற்றிற்கு விடை காணு முகத்தால் சிறிதாராய்ந்து முடித்தலே எனது சொற்பொழிவின் சாரமாக வமையும்.

### பெற்றோர்களின் ஒற்றுழைப்பின் அவசியம்:

நமது இந்திய நாட்டில் சற்றேறக் குறைய 6,85,665 கிராமங்களும், 2,316 நகரங்களும் உள. இந்தியாவின் ஜனத் தொகை 35 கோடிக்கு மேற்பட்டிருக்கிறது. இந்திய மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நாட்டுப் புறங்களில்—கிராமங்களில் வசித்து வருகின்றனர். நூற்றுக்குப் பதின்மர் மட்டுமே நகரவாசிகளாயிருக்கின்றனர். இந் நாட்டில் கல்வியைப் பரவச் செய்வதற்கென இந்திய துரைத்தனத்தார் செய்து வரும் முயற்சிகளில் பயனாய் இன்று நம் மாகாணத்தைப் பொறுத்த அளவில் ஆடவர்களில் நூற்றுக்குப் பதின்மர் வீதமும், பெண்களில் நூற்றுக்கு மூவர் வீதமுமே எழுதப் படிக்கக் கற்றுக்கொண் டிருக்கின்றனர். இதனால் கல்வியில் நம்மவர்கள் எவ்வளவு பிற்போக்கடைந் திருக்கின்றன ரென்பது தெரியவரலாம். மேற்கண்ட விகிதத்தின்படி படித்தவர்கள் என்று கணக்கிடப் பட்டுள்ளவர்களிலும் பலர் உண்மையில் தங்கள் கையெழுத்தை மாத்திரம் இடத் தெரிந்தவர்களே யன்றி, எழுதப் படிக்கத் திறமைப் பெற்றவர்களல்லர். இப்படிப்பட்டவர்களும் கல்வி கற்றவர்களெனக் கணக்கிடப்பட் டிருக்கின்றனர். எனவே, நமது நாட்டின் நிலைக்குக் கல்வியின் அவசியம் எவ்வளவு என்பதை ஊகித்தறியலாம். மேலும்



நந் நாட்டில் பாடசாலைகளுக்குச் சென்று படிக்கக் கூடிய வயதுடைய பிள்ளைகளிலும் ஏறக் குறைய நகரப் புறங்களில் நூற்றுக்கு 50 பிள்ளைகளும், நாட்டுப் புறங்களில் நூற்றுக்கு 25 பிள்ளைகளும் மாத்திரமே பள்ளிகளுக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர். ஏனைய அனைவரும் கல்வி கற்பதற்குச் சிறிதும் அவகாசமின்றி அவமே காலங்கழித்து வருகின்றனர். இத்தகைய நிலையில் இனி வரும் ஜன சமூகம் எத்தகையதா யிருக்குமென்பதைச் சிந்திக்க வேண்டும் ஒரு ஊரில் ஒரு பாடசாலையை ஸ்தாபித்து விட்டால் போதாது. அவ்வூரிலுள்ள வயதுடைய பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு வந்து கல்வி கற்கும்படிச் செய்யவேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று, படிப்பதற்கின்றில் குறுக்கிடும் தடைகள் என்ன வென்பதைக் கவனியுங்கள். பொருளாதாரக் கஷ்டம் ஒன்றும், பெற்றோரின் அறியாமை மற்றொன்றும் ஆம். ஏழை மக்கள் மலிந்த நம் நாட்டில் பெற்றோர் செய்யுந் தொழிலுக்கு அவர்தம் சிறு குழந்தைகளும் துணைபுரிய வேண்டி யிருக்கிறது. சிலர் சிறு தொகையைச் சம்பளமாகச் செலுத்தவும் இயலாதவர்களாகலாம். ஆயினும் இக் காரணத்தை விட பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டுமென்ற அறிவின்மையே பலமான காரணமாகும். விருப்ப முண்டேல் வழியுண்டன்றோ? இவை யனைத்திற்கும் பரிகாரமாகக் காலஞ் சென்ற 'கோபால கிருஷ்ண கோகலே' அவர்கள் இந்தியாவில் "கட்டாய இலவச ஆரம்பக் கல்வி" முறைத் திட்டத்தையே வகுக்க வேண்டுமென வற்புறுத்தினார்கள். இப் பெரியாரது நல்லெண்ணத்தின் பயனாலும், தேசத் தலைவர்களின் இடைவிடாத முயற்சியாலும் நம் மாகாணத்தில் 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக் கல்வி மசோதா பிறந்திருக்கிறது. அதன்படி ஸ்தல ஸ்தாபனங்கள் முன்னின்று உழைக்குமாயின், கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரச் சாதனங்களேற்படும். எனினும் திடீரென்று நம் மாகாண மெங்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி முறை தோன்றிவிடுமென்றெதிர்பார்பதற்கில்லை. உங்கள் அதிர்ஷ்ட வசமாக இம் மகாநாட்டின் தலைவராக அமர்ந்துள்ள ஸ்ரீமதி பிகம் சுல்தான் மீர் அமிருத்தீன் அம்மையார் இந்த ஜில்லாவில் கல்வி வளர்ச்சியைச் சாதிக்குங் கருத்துடன் "ஜில்லாக் கல்வி ஊழியச் சங்கம்" என்ற பெயரால் ஒரு சங்கம் கண்டு வேலை செய்ய முற்பட்டுள்ளார்கள். அவரது முயற்சியின் பயனால் விரைவில் இந்த

ஜில்லாவில் கட்டாய இலவசக் கல்வி முறை யேற்படுமென்றெ திர் பார்ப்போமாக. எனினும் இன்றைய நிலையில் ஒவ்வொரு ஊரிலும் ஏற்பட்டுள்ள பாடசாலைகளில் அவ்வூரிலுள்ள வயதுடைய பிள்ளைகள் அனைவரும் வந்து கல்வி கற்குமாறு தூண்டவேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்வதற்குப் படிப்பின் மதிப்பை அவர்தம் பெற்றோர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். கிராமாந்திரங்களில் பெற்றோர்கள் அநேகர் தங்கள் "பிள்ளைகள் படித்து என்ன உத்தியோகம் செய்யப்போகின்றார்க ளென்றும், கணக்கும், மணியமும் கண்ணியமாகப் பெறுபவர் கல்வி கற்கட்டும்" என்றும் இன்றுங் கூறுவதைக் காணலாம். இதற்குக் காரணம் கல்வியின் அவசியத்தையும், அதன் பயனையும் அவர்கள் பிழைபட அறிந்திருத்தலேயாகும். கல்வியின் பயன் அறிவு விளக்கமடைதலாம். மேலும் ஜீவனோபாயத்தை எளிதில் பெறச் சாதனமாதலுமாம். ஆங்கில நாட்டுப் பேரறிஞராகிய பிஷர் என்ற பெரியார் "ஒரு தேசத்தில் குடியாக வாழ்பவர் அத்தேசத்தின் அரசியலிலும், மற்ற துறைகளிலும் தமக்குள்ள கடமைகளையும், உரிமைகளையும் நன்குணருமாறு செய்தலே கல்வியின் பயனாக விருத்தல் வேண்டும்" என்று கூறியுள்ளார். எனவே பெற்றோர்களுக்கு உலகியலறிவை யூட்டி, கல்வி கற்பதின் பயனை விளக்கிக் காட்டி, உலக அற்புதங்கள் பலவற்றை யறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலை அவர்களிடத்தே மீட்டி, அவர்தம் ஒற்றுமைப்பை யீட்டி, வேலை செய்யவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சார்ந்ததாகும். மேலும் ஒரு பாடசாலைக்கும் அக் கிராம வாசிகளாகிய பொதுஜனங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டிருத்தல் அவசியம். இம் முறையில் போர்டு பாடசாலைகளைவிட பிரைவேட் மானேஜ்மெண்டுகளுக் குட்பட்ட பாடசாலைகள் நேர் முறையில் கிராமவாசிகளாகிய பெற்றோர்களின் கூட்டுறவை அதிகமாக விரும்பி நடந்துவருகின்றன வென்பதை யாரால் மறுக்கமுடியும்? எனவே பொதுவாக ஆரம்பப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், பிள்ளைகளின் கல்வி யபிவிருத்திக்கும், ஆசிரியர்களின் நன்மைக்கும் அக் கிராம வாசிகளாகிய பெற்றோர்களின் ஒற்றுமைப்பு இன்றியமையாததாகும்.

# சங்கக் குறிப்புக்கள்

## ஆசிரிய மானேஜர்கள் சங்கம் சேலம்.

(29—11—33)

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று திரு. ராவ் சாஹெப் இராஜமாணிக்கம் பண்டாரம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்று கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

1. கடந்த மூன்றுவருடங்களைப்போல் குறைக்காமல் இவ்வருடம் எவ்வித குறைவும் இல்லாமல் கிராண்டுத் தொகை கொடுக்கவேண்டுமென்பது.

2. தற்போது ஜில்லாக் கல்விச் சபையில் ஏற்படுத்தப்போகும் கிராண்டு கமிட்டிக்கு ஆசிரிய மானேஜர் ஒருவரை ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவேண்டு மென்பது.

3. ஆசிரிய மானேஜர்களுக்கு அதிகமாக ஜில்லாக் கல்விச் சபையில் ஸ்தானங்களைக் கொடுக்கும் விஷயத்தைப் பற்றி, ஜில்லாக் கல்விச் சபைத்தலைவர் கவர்ன்மென்டிற்கு மறுபடியும் ஞாபக மூட்டி சீக்கிரத்தில் ஸ்தானங்களை கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டு மென்பது.

4. சேஞ்சு ஆசிரிய மானேஜர் சங்கங்கள் கூட்டங் கூடி சீக்கிரத்தில் ஜில்லா சங்கத்திற்கு தங்கள் அபேக்ஷகர்களை தேர்ந்தெடுத் தனுப்ப வேண்டுமென்பது.

5. தற்போது தயாரித்துக் கொண்டிருக்கும் (அமால்கமேஷன் ஸ்கீம்) பாடசாலை வகுப்புக்களையோ, சிறு பாடசாலைகளையோ ஒன்று சேர்க்கப்படவேண்டுமென்னும் (செட்பியன் ஸ்கீம்) விஷயத்தை அமுலுக்கு கொண்டுவருமுன் ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தின் அபிப்பிராயத்தையும் கவர்ன்மெண்டார் கேட்க வேண்டுமென்பது.

6. தாலூக்கா போர்ட், பஞ்சாயத், மிஷன், ஆசிரிய மானேஜர், மானேஜர்கள் கலந்த ஒரு கல்வி மகா நாட்டைக் கூட்டுவதற்காக 5 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

7. அவ்வப்பொழுது வரும் புதிய கவர்ன்மென்ட் உத்திரவுகளை ஜில்லாக் கல்விச் சபையார் இச்சங்கத்திற்கு ஒரு காபி அனுப்பி வைக்கவேண்டு மென்பது.

*காரியதரிசி:—எஸ். ஆர். பொன்னுசாமி ஐயா.*

## ஆசிரிய மானேஜர்கள் சங்கம் தஞ்சை.

(23—11—33)

ஷை சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று தஞ்சை இராஜா சத்திரத்தில் திரு, டி. வ. சாமிநாத ருவ் ஜில்லாக் கல்விச்சபை அங்கத்தினர் (தஞ்சை) அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. சென்னையிலிருந்து விஜயம் செய்திருந்த திரு, டி. இ. வரதாச்சாரியர் அவர்கள் தற்போது அமுலிலிருக்கும் அமால்கமேஷன் ஸ்கீம் அதாவது [ஆரம்பப் பாடசாலைகளில் 30 பிள்ளைகளுக்கு குறைவாக இருக்கும் வகுப்புக்களை அடுத்தாபோலுள்ள பாடசாலைகளில் சேர்த்துவிட வேண்டுமென்பது] பொதுவாக அநேக ஆரம்ப பாடசாலைகளை பாதிக்கப்படுமென்றும், பல எய்டட் ஆரம்பப் பாடசாலைகளை அதிகமாக பாதிக்கக்கூடுமென்றும், அதைப்பற்றி சீக்கிரத்தில் தாலூக்கா போர்ட்டு, பஞ்சாயத், முனிசிபல், முதலிய அங்கத்தினர்களும், மிஷன், ஆசிரிய மானேஜர் மானேஜர்களும் கலந்த ஒரு மகா நாட்டை சீக்கிரத்தில் தஞ்சையில் நடத்தப்பட வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்தது.

1. தாலூக்கா போர்ட், பஞ்சாயத், முனிசிபல், மிஷன், ஆசிரிய மானேஜர் மானேஜர்கள் கலந்த ஒரு மகா நாட்டை வேதாரண்யத்தில் கூட்டப்பட வேண்டுமென்பது.

2. திரு. நாடிமுத்துப் பிள்ளையவர்கள் வேதாரண்யத்தில் மகா நாட்டிற்கு தலைமை வகிக்கவேண்டுமென்பது.

3. திரு, டி. சதாசிவ செட்டியார் அவர்கள் [டிப்டி டைரக்டர்] மகா நாட்டைத் திறக்க வேண்டுமென்பது.

4. ஒவ்வொரு ரேஞ்சிலுள்ள ஆசிரிய மானேஜர்கள் இம்மகா நாட்டை நன்றாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சீக்கிரத்தில் செய்யவேண்டுமென்பது.

5. ஜில்லாக் கல்விச் சபைத் தலைவர் கவர்ன்மெண்டிடமிருந்து அட்வான்ஸ் கிராண்டை சீக்கிரத்தில் தருவித்து எல்லா எய்டட் பாடசாலைகளுக்கும் கொடுக்க வேண்டுமென்பது.

---

## தஞ்சைத் தலையூர் ஆரம்பாசிரியர்களின் சங்க நடவடிக்கை.

இச்சங்கத்தின் மாதாந்திர சாதாரணக் கூட்டம் 28-10-33ல பிற்பகல் 1-30 மணிக்கு இவ்வூர் போர்டு ஆண்பாடசாலைக் கட்டிடத்



தில் சங்க நிர்வாகக் கமிட்டியின் கோயமுத்தூர் ஜில்லா அங்கத்தினரும் இச்சங்க காரியதரிசியுமான ஸ்ரீமான் டி. ஆர். சங்கர நாராயணய்யர் அவர்கள் தலைமையின் கீழ் துவக்கியது.

இச் சங்கத்தின் உதவி காரியதரிசியால் இச்சங்கத்திற்கு வரும் மாதாந்திரப் பத்ரிகைகள் மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்டதுடன் இம்மாதம் இச் சங்கத்தின் பார்வைக்கென மாதிரிக் காபியாக ஆரம்பக்கல்வி யென்னும் பத்திரிகையை அதன் ஆசிரியர் அனுப்பி வைத்திருப்பதாகவும், அதிலுள்ள விஷயங்கள் நம் சமூகங்களின் சார்பிலேனும் இப்பத்திரிகையை வரவழைத்து ஆதரிக்க வேண்டுமாகத் தீர்மானிக்கப்பட்டது. மெம்பர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டு வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு ஒரு வருஷத்திற்கு சந்தா செலுத்தலாமாகத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வூர் ஆண்பாடசாலை முதல் உதவி ஆசிரியர் பி. கெ. இராமய்யரால் [illegible]-ம் வகுப்பிற்குப் பின்னத்தில் முதற்படம் 50 நிமிஷம் போதிக்கப்பட்டது.

நடந்த பாடத்தில் அங்கத்தினர்கள் குணதோஷம் கூறியபின் ஒழுக்கம் என்பதுபற்றி வியாசம் சிற்சில அங்கத்தினர்கள் பேசினார்கள்.

கடைசியாக இன்றைய மீட்டிங்கில் மாதிரிப் பாடம் கொஞ்சம் நேரம் அதிகமான தோஷம் தவிர, மற்றபடி மிகவும் திருப்திகரமாக போதிக்கப்பட்டதென்றும், ஒழுக்கம் இருவகைப்படும் அதில் நல்லொழுக்கும், தீயொழுக்கம் என்பன. செய்கையால் ஒழுக்கம் மாறுபடக்கூடும் ஆகையால் சிறுவயது முதற் நல்லவர்களுடன் சேர்ந்து செய்கைகளை நிகழ்த்த வேண்டும் என்றும் இச்சங்கத்தின் ஆண்டு விழாவின்போது சென்ற 4-3-33 ல் இது விஷயத்தைப்பற்றி பேசிய திருவாளர் எஸ். சச்சிதானந்தம் பிள்ளையவர்களின் சொற்பொழிவு நாம் என்றும் மறக்கமுடியாததென்றும், அதுபோல அரிய உபன்யாசங்கள் இதுபோன்ற சங்கங்களில் அடிக்கடி நடத்தவேண்டுமாகவும் அஃதியலாவிடினும் நல்ல கட்டுரைகளடங்கிய ஆரம்பக்கல்விபோன்ற நம் சமூகத்திற்குழைக்கும் பத்திரிகைகளை வரவழைத்துப் படித்துணர வேண்டுமாயும் முடிவுரை கூறினார்.

தலைவர்க்கு வந்தனோபசாரமும் இராஜ வாழ்த்தும் கூறி மாலை 4-மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

காரியதரிசி:—டி. ஆர். சங்கரநாராயணய்யர்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம் ஆத்தூர் ரேஞ்சு.

இச்சங்கத்தின் ஓர் மாதாந்திரக் கூட்டம் 4-11-33 ல் காலை 11-மணிக்கு ஆத்தூர் போர்டு அஜீஜியா பாடசாலைக் கட்டிடத்தில் சங்க வைஸ்பிரசிடெண்ட் ம-ா-ா-ஸ்ரீ எஸ். கிருஷ்ண ராவ் அவர்களின் தலைமையின் கீழ் கூடி நடத்தப்பட்டது.

திரு, அப்துல் ஷகூர் அவர்கள் காரியதரிசியாக நியமிக்கப் பெற்றார் சில பாடக் குறிப்புகள் நடத்தப்பட்ட பிறகு நரசிங்கபுரம் தலைமை ஆசிரியர் திரு, நாராயணன் அவர்கள் "தொழிற் கல்வியின் மேன்மை" என்ற தலைப்பில் ஓர் சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா, ஜெர்மனி சைனா முதலிய அந்நிய நாடுகள் செல்வமிகுந்து சீரும் சிறப்புற்றும் விளங்குவதற்குக் காரணம் அந்நாடுகளில் நாளுக்குநாள் "தொழிற் கல்வி அபிவிருத்தியே முக்கியகாரணமாகு மென்றும்" அத்தகைய தொழிற் கல்வி அபிவிருத்தி செய்வது ஆசிரியர்களின் முக்கிய கடைமை யாதலின் ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் தங்கள் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு தொழிற் கல்வி கற்பிக்க ஆரம்பிக்கவேண்டுமென்றும் கூறினார்.

காரியதரிசி:—எஸ்., சையத் அப்துல்ஷகூர்.

---

## பெரியகுளம் ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள் சங்கம்

இச் சங்கத்தின் கூட்டம் 5-11-33-ல் மாலை சின்னமனூர் போர்டு ஸ்கூலில் பெரிய குளம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் திரு, டி. வி. வெங்கிடாராமய்யர் அவர்கள் பி. ஏ., எல். டி. தலைமையின் கீழ் நடைபெற்றது.

மதுரை ஜில்லா ஆசிரிய மானேஜர் சங்கத்திற்கு பெரியகுளம் உத்தமபாளையம் இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து பெரிய ரேஞ்சாயிருப்பதால் மூன்று மெம்பர்களை தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும், அவ்வாறே சின்னமனூர் திரு, பி. சொக்கலிங்கம் பிள்ளை முந்தின இரு மெம்பர்களுடன் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

நிர்வாக மெம்பர்களாக பேச்சிமுத்துப் பிள்ளை, துரை ராஜ் இவர்களுக்குப் பதிலாக திருவாளர்கள், எஸ். ஆர். பொன்னையா, கோட்டூர். கெ. எம். சௌண்டய்யா, போடிநாயக்கனூர். இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.



எலிமெண்டரிப் படிப்பு விஷயமான உத்திரவுகளுக்கும், மானேஜ்மெண்டு மாறுதல், ரத்தாகுதல், புதிதாய் ஏற்படுதல், இவற்றிற்கு ஒரு நகல் அனுப்பிவரும்படி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டரவர்களைக் கேட்டுக் கொள்ளவும் தீர்மானித்து முடிவுபெற்றது.

காரியதரிசி:—கெ. சௌண்டய்யா அவர்கள்.

---

## போளூர் தாலூக்கா கடலாடி ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

போளூர் ரேஞ்சு கடலாடி செண்டர் ஆரம்ப ஆசிரியர்களின் சங்கத்தின், 1933-ம் வருஷம் நவம்பர் மாதத்திய சாதாரணக் கூட்டம் 18-11-33-ல் காலை 9-மணிக்கு கடலாடி போர்டு ஆண்பாடசாலை கட்டிடத்தில் ஷை சங்க ஸெகரெடரி அவர்கள் அக்ராசனத்தின்கீழ் கூடி நடத்தப்பட்டது.

1. முன் கூட்டத்திற்குப் பிறகு வந்த ம-ா-ா-ஸ்ரீ போளூர் ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களின் ஆர். ஸி. 233 நெ. ல். அனுப்பிய, போதனாமுறை பள்ளியில் லோயர் கிரேட்டில் பயின்று பெற்றுள்ள டி. டி. ஸி. சர்டிபிகேட்டை, ஹையர் கிரேட் டி. டி. ஸி. யாக திருத்தும் விஷயமாய், திருத்தப்பட்ட மதறாஸ் எஜுகேஷனல் ரூல்லை வாசித்து பைல் செய்யப்பட்டது.

2. ஆரம்பக்கல்வி என்னும் மாத சஞ்சிகையை மாதிரியாக நம் சங்கத்திற்கு அனுப்பிவரும் கனம் பத்திராதிபருக்கு இச்சங்கம் அதிக வந்தனம் அளிப்பதோடு, சஞ்சிகையை ஆனந்தமாய் ஏற்றுக் கொண்டு, நீடூழிவாழ்க எல்லாம் வல்ல இறைவனை இச்சங்கம் பிரார்த்திக்கின்றது

3. இச்சங்க சார்பாக ஷை சஞ்சிகையை ஒரு பிரதி தருவிக்கவும், இதன் உறுபினரெல்லோரும் குறைந்தது பாடசாலைக்கொருவராவது சந்தாதாரராக சேர்ந்து அவசியம் ஆதரிக்கவேண்டுமென்று இச்சங்கம் தீர்மானிக்கின்றது.

4. அடுத்த 16-12-33 ல் கூடப்போகும் கூட்டத்தில் எலக்ஷன் செய்யவேண்டிய நிமித்தம் சங்க பிரசிடெண்ட் அவர்கள் ம-ா-ா-ஸ்ரீ போளூர் ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களை அக்ராசனம் வகித்து நடத்த இச்சங்கம் கோரி கேட்டுக்கொள்ளுகிறது.

5. மாதிரிப்பாடம்:—இரண்டாம் வகுப்புக்கு வாசகம், கடலாடி போர்டு ஆண்பாடசாலை உதவி ஆசிரியர் என். கிருஷ்ணசாமிப்

பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டது. பாடம், கையாண்ட முறையும், திறமையும் அதிகமும் நன்றாயிருந்தது.

6. வியாசம்:—கல்வி என்பதைப்பற்றி டெபுடி யாராலேயும், இன்னும் இதர சிற்சில மெம்பர்களாலேயும், இன்னும் இதர சிற்சில மெம்பர்களாலேயும் சம்பந்தமாய் பேசப்பட்டன.

காரியதரிசி:—வசுந்தர நைனார்

## "ஓமலூர் ரேஞ்சு தாரமங்கலம் சென்டர் ஆரம்ப ஆசிரியர் சங்க வருடாந்திர விழா"வில் நிகத்திய சொற்பொழிவு

(28—10—33)

ஓமலூர் செகன்டரி பாடசாலையின் தமிழாசிரியர் உயர்திருவாளர் இராஜய்யா அவர்கள் பெற்றோர் கடமையும் பிள்ளைகள் கடமையும் என்னும் பொருள்பற்றி தந்தைதன் பிள்ளைக்கு அவசியம் கல்வி பயிற்றல் வேண்டும் அத்தகைய கல்வி ஒரு ஜென்மத்தோடல்லாமல் எழு ஜென்மத்திற்கும் உதவி புரியும். இதுபற்றியே திருக்குறளில்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து"

என்று கூறிய செய்யுளை விவரித்துக் கூறியும்.

"தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்ற திருக்குறளை தலைப்பாக வைத்துக்கொண்டு இதன் கண்ணடங்கிய நுண்பொருளை பெரிய புராணம், பாரதம் முதலான நூல்களின் மேற்கோளோடு இணைத்துக் காட்டியும் இதனால் கல்வியின் பெருமையைக் கூறி ஒவ்வொரு பெற்றோர்களும் அவசியம் தத்தம் பிள்ளைகளுக்கு கல்விபயிற்றி சபையின்கண் முந்தியிருக்கச் செய்ய வேண்டுமென்றும் அதன் பின்னர் பிள்ளைகள் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமை.

"அரசன் உபாத்தியாயன் தாய் தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர்
தேவரைப்போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி"

என்ற ஆசாரக் கோவையின் செய்யுளைக் கூறி பிள்ளையின் திற



மையினால் கேட்போர் இத்தகைய பிள்ளையைப் பெறுவதற்கு இவன் தந்தை எத்தகைய தவத்தைச் செய்தானோ என்று கூறும்படியாக தங்கள் படிப்பின் திறமையைக் காட்டவேண்டுமென்றும் இதன் கருத்தையே திருக்குறளில்

"மகன் றந்தைக் காற்று முதவி யிவன்தந்தை
என்னோற்றான் கொல் லெனுஞ் சொல்"

என்று கூறப்பட்டிருத்தலின் கருத்தை இனிது விளக்கி இத்தகைய நன்றிசெய்த தந்தைகளுக்கு "யாரே கைம்மாறியற்றுவார்" என்ற பாரதச் செய்யுளை மிக உருக்கமுடன் கூறி இதனாலே நாடெங்கும் கல்வி பரப்பவேண்டுமென்றும் இத்தகைய பயன்தருங் கல்வி பண்டைக் காலத்தில் எங்கும் நிறைந்ததென்றும் நாட்டின் வருணனை கூறுமிடத்து "கல்லாது நிற்பார் பிறரின்மையில்" என்ற கம்பர் திருவாக்கை நினைவூட்டியும் பல நயம்பட கேட்போர் மனத்தைக் கவரும் வண்ணம் எளிய நடையில் அரிய விஷயத்தை தெளிவாக விளக்கியும் தம்மரிய சொற்பொழிவை முடித்தனர்

## பேசும் இயந்திர மனிதன்

சிக்காகோ நகரில் நடந்த உலக பொருட்காட்சிக்கு பல அபூர்வமான இயந்திரங்களும், ரசாயன ஆராய்ச்சியின் அபிவிருத்தியால் கண்டுபிடிக்கப்பட்ட அற்புதமான ரசாயன கருவிகளும் வந்திருந்தன. இவற்றுள் ஒன்று பேசும் இயந்திர மனிதனை சிக்காகோ காட்சியிலுள்ள மின்சாரக் கட்டிடத்தில் வைத்திருந்தார்கள். இது டெலிபோன் செய்து பிறருடன் பேசுகிறது. கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது பிறர் என்ன சொன்னாலும் அதன்படி செய்கிறது. சிகரட்கொடுத்தால் அதை சாதாரணமாக மனிதர் பிடிப்பது போல் புகைத்துப் புகையை வெளியில் விடுகிறது, கண்களை சிமிட்டிக்கொண்டு, பிறருடன் கை குலுக்குகிறது. பேசிக் கொண்டிருக்கும் போதே சந்தர்ப்பத்தை யுத்தேசித்து, நின்று கொண்டிருக்கிறது. இன்றேல் உட்கார்ந்து கொண்டே பேசிக் கொண்டிருக்கும். இது மட்டுமல்ல, பாடும்படி கேட்டால் அருமையாகப் பல சங்கீதங்களைப் பாடுகிறது. பொதுப்பட கூறுமிடத்து, ஆறறிவு படைத்த மனிதர்களைப்போல் சகலமும் செய்கிறது. ஆயினும் இது இயந்திரத்தாலும், மின்சார ஒளிகளாலும் அமைக்கப்பட்ட ஒரு இயந்திரந்தான். ரசாயன அபிவிருத்யின் போக்கிற்கு இது ஒரு உதாரணம்.

# முட்டையில் பொறிக்கும் எலிக் குஞ்சு

விஞ்ஞான வளர்ச்சியின் போக்கு விபரீதமாகவே இருக்கிறது. இனிமேல் பெண்கள் குழந்தைகளைப் பெறமாட்டார்களாம்! ரசாயன சாலைகளில் கண்ணாடிக் குழாய்களில் குழந்தைகளை உண்டு பண்ணி விடுவதாக சில விஞ்ஞான ஆராய்ச்சிக் காரர் கூறுகிறார்கள். ஆனால் இது எதிர்காலத்தில் சாத்தியமாகுமா வென்பது சந்தேகமே. சில ஆராய்ச்சிக்காரர் கூறுவதிலிருந்து இது அடியோடு சாத்தியப்படா தெனத் தெரிகிறது ஆனால் எலிபோன்ற சிறு ஜந்துக்களை கோழி முட்டைகளிலிருந்து பொரிக்கச் செய்து விடலாமென்பது சில டாக்டர்களின் நம்பிக்கை. உதாரணமாக, அமெரிக்காவில் டாக்டர். ஜே. எஸ். நீக்கோலாஸ், டாக்டர், ஆர். ரட்னிக் இருவரும், சில கோழி முட்டைகளிலிருந்து எலிக்குஞ்சுகளைப் பொரிக்கச் செய்ய ஆராய்ச்சி செய்து வந்தார்கள். 5 முதல் 12 தினங்களில் அந்த கோழி முட்டைகளைப் பொரிக்கச் செய்தன ரென்றும், முட்டையிலிருந்து எலிக் குஞ்சுகளை அநேகமாக உற்பத்தி செய்துவிட்டனரென்றும் தெரிகிறது. இதைப்பற்றி அந்த டாக்டர்களே அமெரிக்க விஞ்ஞான சாஸ்திரிகள் சங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்கள்.

---

## மனிதர் மூளைக் குறைவு

மிருகங்களின் மூளைக்குமுன் மனிதர் மூளை இன்னமும் இளம் பருவத்திலேயே இருக்கிறதெனலாம். இதைப்பற்றி பண்டிதர் பிரடரிக்டில்னே கூறுவதாவது:—

மனிதர் மூளையின் வயது சுமார் 20000000 இருக்கும் ஆனால், மிருகங்களின் மூளை அதிகமாக விருத்தி யடையவில்லை என்பது மெய்யே. ஆனால் அவைகளுக்கு வயது அதிக மென்பதை எவரும் மறுக்க முடியாது. எலிகளின் மூளையின் வயது 4 கோடியே 50 லக்ஷமாகிறது. ஆனால் மனிதர் மூளையிலிருக்கும் சிறு அறைகளைப்போல மிருகங்களின் மூளையில் கிடையாது. ஒரு மனிதன் மூளையில் சுமார் 14000000000 சிறு அறைகளிருக்கின்றன. அதாவது தற்போதுலகின் ஜனத்தொகை எவ்வளவோ அதைவிட 7 மடங்கு அதிகமான தொகையுள்ள அறைகள் மூளையில் அடங்கியிருக்கின்றன. ஆனால் மனிதர்களோ தங்கள் மூளையில் அடங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான சிறு அறைகளில் 100க்கு 25 வீதம் உபயோகிக்கிறார்கள். இவ்விதமாக உலகில் மனிதரின் மூளை சக்தி அருகிக்கொண்டு போகிறதெனலாம்.

190331

# "ஆரம்பக் கல்வி புத்தகசாலை".

## உபாத்தியாயர்களுக்குரிய புத்தகங்கள்

ஆங்கில மொழியில் கல்விசைப் புலவர்களான ஸ்டீல் அடிசன் கார்லைல் கோல்ட்ஸ்மித்து முதலியவர்கள் சொற்சுவை, பொருட்சுவை, நகைச்சுவை நிரம்ப எழுதிய கட்டுரைகள் அம்மொழி பயிலுவோர்க்கு உவகை யூட்டிப் பயன்படுவன போலத் தமிழ் பயிலுவோர்க்கு 'மகிழ்நன் கட்டுரைகள்' உலப்பிலா இன்பந் தந்து பயன்படு மென்பதில் ஐயமில்லை.

கற்றார், கல்லாதார், பெண்கள் முதலியோர் கேவலமான நாவல்களைப் படிப்பதைவிட இத்தகைய நூல்களைப் படிப்பின் இன்பச் சுவையும் அறிவாராய்ச்சியும் பெறுவர்.

இதனை ஒருமுறை படிப்பவர் தாமே பன்முறை படிக்கவும், பிறரைப் படிக்கச் சொல்லவும் முந்துவர் என்பது திண்ணம்.

இதன் விலை ராப்பர் அணா 14. உயர்ந்த பதிப்பு ரூ. 1—0

ஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சிந்தனைக் கட்டுரைகள் | .... | .... | 1 | 0 |
| கோகிலாம்பாள் கடிதங்கள் | .... | .... | 3 | 0 |
| அறிவுரைக் கொத்து | .... | .... | 2 | 4 |
| மனித வசியம் | .... | .... | 2 | 8 |
| வேளாளர் நாகரிகம் | .... | .... | 1 | 4 |
| பட்டினப்பாலை ஆராய்ச்சி | .... | .... | 1 | 8 |
| முல்லைப்பாட்டு ஆராய்ச்சி | .... | .... | 1 | 4 |
| மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் | .... | .... | 11 | 0 |

திருமதி நீலாம்பிகை யம்மையார்

| | | | | |
|---|---|---|---|---|
| தனித்தமிழ்க் கட்டுரைகள் | .... | .... | 1 | 0 |
| மூப்பெண்மணிகள் வரலாறு | .... | .... | 0 | 14 |
| கண்ணப்பர் வரலாறு | .... | .... | 0 | 10 |

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம். எல்.

| | | | | |
|---|---|---|---|---|
| அப்பர் சரித்திரம் நூலாராய்ச்சியுடன் | .... | .... | 0 | 14 |
| சம்பந்தர் சரித்திரம் ,, | .... | .... | 1 | 4 |
| சுந்தரர் சரித்திரம் ,, | .... | .... | 1 | 2 |
| மாணிக்கவாசகர் சரித்திரம் ,, | .... | .... | 0 | 14 |
| சேக்கிழார் சரித்திரம் ,, | .... | .... | 1 | 0 |
| குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் ,, | .... | .... | 1 | 0 |
| பட்டினத்தார் சரித்திரம் ,, | .... | .... | 0 | 12 |
| தாயுமானவர் சரித்திரம் ,, | .... | .... | 1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| சிவஞான சுவாமிகள் சரித்திரம் ,, | .... .... | 1 | 0 |
| தமிழ் இலக்கிய வரலாறு ,, | .... .... | 2 | 0 |

திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை யவர்கள், பி. ஏ., பி. எல்.

| | | | |
|---|---|---|---|
| திருவள்ளுவர் நூல் நயம் | .... .... | 1 | 0 |
| சிலப்பதிகார விளக்கம் | .... .... | 1 | 8 |
| பன்னிருகட்டுரை | .... .... | 0 | 12 |

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்

| | | | |
|---|---|---|---|
| மனுமுறை கண்டவாசகம் | .... .... | 0 | 8 |
| ஜீவகாருணிய ஒழுக்கம் | .... .... | 0 | 4 |

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

| | | | |
|---|---|---|---|
| கபிலர் வரலாறு | .... .... | 1 | 0 |
| நக்கீரர் வரலாறு | .... .... | 0 | 15 |
| கள்ளர் சரித்திரம் | .... .... | 1 | 4 |
| சோழர் சரித்திரம் | .... .... | 0 | 15 |
| கண்ணகி வரலாறும் கற்புமாண்பும் | .... .... | 0 | 9 |

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்

| | | | |
|---|---|---|---|
| முருகன் அல்லது அழகு | .... .... | 1 | 0 |
| தமிழ்த் தென்றல் | .... .... | 2 | 0 |
| பெண்ணின் பெருமை | .... .... | 2 | 0 |
| சீர் திருத்தம் | .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் | .... .... | 0 | 8 |
| என்கடன் பணி செய்து கிடப்பதே | .... .... | 0 | 8 |

மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்

| | | | |
|---|---|---|---|
| பல்பொருட் கட்டுரை | .... .... | 1 | 0 |
| புலவர் கதைகள் 2 பாகம் | .... .... | 1 | 8 |

கம்பராமாயணம்

யுத்தகாண்டம்

| | | | |
|---|---|---|---|
| உரையுடன் 2-பாகம் | விலை ரூ. | 10 | 0 |
| திருக்குறளும் ஜைனமதக் கொள்கைகளும் | | 2 | 4 |
| ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் | | 2 | 8 |

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

| | | | |
|---|---|---|---|
| உதயணன்கதைச் சுருக்கம் | .... .... | 1 | 4 |
| மணிமேகலைகதைச் சுருக்கம் | .... .... | 0 | 10 |

ஆரம்பக் கல்வி புத்தகசாலை.

94-95 புதுத் தெரு, மண்ணடி, மதறாஸ்.

# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. ஏ. எல். டி. இயற்றியது.

கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். ஏ. இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| கலைமகள் வாசகம் முதல் வகுப்பு | 0 | 2 | 6 |
| இரண்டாம் வகுப்பு விலை அணா 3 | | | |
| மூன்றாம் வகுப்பு ,, 4 | | | |
| நான்காம் வகுப்பு ,, 5 | | | |
| ஐந்தாம் வகுப்பு , 6 | | | |

கலைமகள் கதாவாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் விலை ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் விலை ... | 0 | 3 | 0 |

கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாயக்கர்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா | 0 | 5 | 0 |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, | 0 | 6 | 0 |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, | 0 | 8 | 0 |
| 4-வது புத்தகம் (5-வது வகுப்பு) ,, | 0 | 9 | 0 |

நீதிக்கட்டுறைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. ஏ. எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் அணா ... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .. | 0 | 7 | 0 |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, ... | 0 | 4 | 0 |

இந்துதேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர் ரங்கசாமி ஐயங்கார், எம். ஏ., எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா ... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, ... | 0 | 5 | 0 |

எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி.ஏ.,எல். டி. எம். ஆர்.ஏ.எஸ்.

| | | | |
|---|---|---|---|
| வட ஆற்காடு பூகோளம் அணா ... | 0 | 4 | 0 |
| செங்கற்பட்டு பூகோளம் ,, ... | 0 | 5 | 0 |

பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். ஏ., எல். டி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | 0 | 5 | 0 | இரண்டாம் புத்தகம் | 0 | 7 | 0 |
| மூன்றாம் புத்தகம் | 0 | 6 | 0 | நான்காம் புத்தகம் | 0 | 8 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | 9 | 0 | 0 | | | | |

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.

நெ. 2, சுகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதறாஸ்.

# ஸ்ரீ ரத்னம்

இந்த டானிக் காலை மாலை சாப்பிடுவதால் பெரும்பாடு, மலட்டு ரோகம், வெட்டைச் சூடு நீர்பை கொதிப்பு, வீட்டு விலக்கங் கண்டதில் பெருச்சாளி செத்த துர்கந்த நாற்றம், பெலக் குறைவால் அடிவயற்றிலுள்ள நரம்பு விலகி பூராலக்கம் என்றும் பிரளியைப்போல் அடிக்கடி வயற்றுவலி உண்டாவது. சோகை, பாண்டு காமாலை, சீதபேதி, மூலச்சூடு கை கால் ஒச்சல், அசதி, மயக்கம் இவைகள்யாவும்





குணமடைவதுடன், கெர்ப புழுக்களை நசித்து புத்ரசந்தானம் உண்டாக நிலம் பரிசுத்தப்படுகிறதுடன், நல்ல தேஜஸும் அழகையும் சுறுசுறுப்பையும் உண்டாக்குகின்றது. கெர்பவதிகள் இதை ஆரம்பமுதல் பிரசவிக்கும் வரையில் சாப்பிடுவதால் குழந்தைகள் காப்பான், வெட்டைரோகம் அணுகாமல் சுகஜீவியாகவும் ஆரோக்கியமாகவும் புஷ்டியாகவுமிருக்கும். இந்த ஸ்ரீ ரத்னம் என்னும் டானிக் சாப்பிடும்விதம் மருந்துகளுடன் அனுப்புவோம்.

இம்மருந்துக்கு அநேக நற்சாக்ஷியுண்டு.

# சித் சுகாநந்த தில் குஷ் குளிகை

இக் குளிகையின் குணம் கிழவர்களும் வாலிபர்களாக வாழ்ந்து, சுகபோகத்தை அனுபவிக்க நிகரற்றது. முதல் இடுப்பு வலியைபோக்கும். நரம்புத் தளர்ச்சியை பிகுவுண்டாக்கும். இழந்த ஆண் தன்மையை மீண்டும் உயிர்பெறச் செய்யும். சரீர காந்தி அழகு சுறு சுறுப்பும், மூளைக்கும் இருதயத்திற்கும், நாடி நரம்புகள் யாவற்றிற்கும், நல்ல ரத்த ஓட்டத்தை பரவச் செய்யும். புத்தி கூர்மையை உண்டாக்கும். இந்திரியம் கெட்டிப்படும். காலை



மாலையாக 20 நாள் விடாமல் 40 குளிகைகள் சாப்பிட வேண்டியது. அவசியம் இதை விரிவாய் எழுதக் கூடாதென விடுத்தோம்.

20 நாள் சாப்பிடும் 40 குளிகை விலை ரூ. 7-8-0

ஜெனரோக, நிவாரண வைத்தியசாலை,
சித்த ஆயுர்வேத பண்டிட், எம். பாலசுந்திரம் பிள்ளை,
கெ. 24, ஜீல்ஸ் தெருவு ஜி. டி. மதருஸ்.

உலக பிரசித்தி பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் முதலிய வாடை கமழுகின்றன.


ஒரு முறை வாங்கி உபயோகித்தால்
அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,
புகையிலை கமிஷன் ஏஜென்டுகள், அண், பொடி வியாபாரிகள்,
2-21, பாரிஷ் வெங்கடாஜல ஐயர் தெருவு,
தபால் பெட்டி கெ. 189, சென்னை.

## 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

# மதனமஞ்சரி




40 மாத்திரைகள் அடங்கிய

டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும்,. தரும்.

இனாம்! வைத்திய வித்தியா இனாம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் சிலவு இல்லாமல் அனுப்பப்படும்.

மதன மஞ்சரி பார்மஸி, 1-94, சைனாபஜார் ரோட், மதராஸ்.


# எமது தமிழ் நூல்கள்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.)

எமது கோபால் புதிய தமிழ் வாசக புஸ்தகம் 1-5, சென்னை, மைசூர், திருவாங்கூர், சிலோன், பர்மா, துரைத்தனத்தார் அங்கிகாரம்செய்து ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் இது வரையிலும் பார்த்திராவிட்டால் உடனே எழுதவும்.

| | ரூ. | அ. | ப |
|---|---|---|---|
| எ. எம். எஸ். இராகவன் பி. ஏ., எல். டி., எழுதியவை. | | | |
| கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் | 0 | 2 | 6 |
| கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் | 0 | 3 | 0 |
| கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் | 0 | 4 | 0 |
| கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் | 0 | 4 | 6 |
| கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் | 0 | 6 | 0 |
| புதிய புஸ்தகங்கள். | | | |
| வித்வான் எம். வி. வேணுகோபால் பிள்ளை | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 6. | 0 | 7 | 0 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 7. ,, | 0 | 8 | 0 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 8. ,, | 0 | 9 | 0 |
| உலக அதிசயங்கள் புஸ்தகம் 1. சி.கார்டன் முகவுரையுடன் | 0 | 3 | 0 |
| ,, புஸ்தகம் 2. ,, .... | 0 | 4 | 0 |
| ,, புஸ்தகம் 3. ,, .... | 0 | 5 | 0 |
| தினசரி கணக்கு புஸ்தகம் 1. எஸ். ஜெகந்நாதன் .... | 0 | 4 | 0 |
| தினசரி கணக்கு புஸ்தகம் 2. ,, .... | 0 | 5 | 0 |
| தினசரி கணக்கு புஸ்தகம் 3. ,, .... | 0 | 5 | 0 |
| சென்னை ராஜதானி பூகோளம்—இ. வி. கோபாலய்யர் .... | 0 | 6 | 0 |
| சுகாதார விளக்கம் 4, 5-வது வகுப்புகளுக்கு உரியது. (இ. வி. கோபால அய்யர் டிப்டி இன்ஸ்பெக்டர்) .... | 0 | 5 | 0 |
| சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரி நாதர் .... | 0 | 5 | 0 |
| கம்பர் அல்லது கவியரசு—பண்டிதர் ஆ. நா. கன்னையா | 0 | 5 | 0 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினா விடை—பண்டிதர் கா. ரா. கோவிந்த ராஜ முதலியார் | 0 | 4 | 0 |
| சிறுவர் இந்துதேச சரித்திரம்—வி. ஜயராம அய்யர் பி. ஏ., பி. எல். | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம்—முதற் புஸ்தகம் எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. ஏ., எல். டி. | 0 | 5 | 0 |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி.

புஸ்தக வியாபாரிகள், ஜார்ஜ் டவுன், சென்னை.

# சுயச் சந்தனாதி தைலம்

இத்தைலத்தை மூளைக்கு சதா சூடேற்றிக் கொள்ளும் வித்வான்கள், வக்கீல்கள், ஜட்ஜிகள், பாடகர்கள், உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், எல்லோருக்கும் நல்ல குணத்தைதந்து ஓர் சிறந்த தோழனைப்போல் பக்கபெலனுண்டாக்கும் சக்தி வாய்ந்தது மூளைக்கு நல்ல குளிர்ச்சியும் கண் ஒளியும் மயிர் வழ வழப்பும், சுகந்த வாசனையும், பித்தாதிக்கத்தாலுண்டாகும், மயக்கம் கண் எரிவு புகைச்சல் காதில் நீர் தங்குதல் புடரிவலி இவைகள் போவதுடன், வியர்வையாலுண்டாகும் நாற்றங்கள் மூலச்சூடும் தணியும், கண்களிலிட்டால் வெள்ளெழுத்துமாறும், மயிர் கரை நீங்கும், ரொம்பவும் அனுபவம்.




எமது விலாசம்:—

ஜெனரோக, நிவாரண
வைத்தியசாலை,
சித்த ஆயுர்வேத பண்டிட்,
எம். பாலசுந்தரம் பிள்ளை,
நெ. 24, ஜீல்ஸ் தெருவு,
ஜி. டி. மதருஸ்.

---

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியது. ரிஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்ட

## ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

இது தமிழ் நாட்டில் 3,75,000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு எங்கும் பிரபல்ய மடைந்தது. இங்கிலீஷ் பேசவும், எழுதவும், படிக்கவும் கற்றுக் கொள்ளக்கூடிய புத்தகம் இதுதான் 872-பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் சீமை காலிகோ பயிண்டுடன் கூடியது

விலை ரூ. 2 0 0    ஷை தெலுங்கு புஸ்தகம் ரூ. 2 0 0
ஷை கன்னட புஸ்தகம் ரூ. 2 0 0

ஆரம்பக் கல்வி புத்தகசாலை,
94-95. புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.



## சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹக் மாத்ரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும். 32 மாத்ரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனம்! இனம்!! இனம்!!!

‘இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி’

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹக் ஔஷதாலயம்
26, பிராட்வே, மதருஸ்.



உள்ளூர் வெளியூர் வாசிகளுக்கு முக்கியமாய்க் காண்பிக்கவும்

சங்கீதம் கற்கவேண்டுமா?

ஹார்மோனியப் பயிற்சி செய்ய வேண்டுமா?”

அப்படியானால், ஹார்மோனிய வாத்திய நுட்பங்களைச் சந்தேக விபரீதமறத்தெள்ளிய நடையில் எளிதில் கற்குமாறும் ஆண், பெண் இருபாலரும் எளிதில் உணருமாறும் எழுதியுள்ள தமிழ்ப் புத்தகங்களாகிய,

“சங்கீத ரஞ்சனி”

“சங்கீத அலங்காரம்”

என்ற புத்தகங்களை உடனே வாங்கி உபயோகிக்கவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கீத ரஞ்சனி முதற்பாகம் | | விலை ரூபா | 3 | 0 | 0 |
| சங்கீத அலங்காரம் | ,, | விலை ரூபா | 3 | 8 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

ஆரம்பக் கல்வி புத்தகசாலை,
94-95, புதுத் தெரு, மண்ணடி மதருஸ்.

# எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 2 | 6 |
| இரண்டாம் ,, | .... | 0 | 3 | 0 |
| மூன்றும் ,, | .... | 0 | 4 | 6 |
| நான்காம் ,, | .... | 0 | 5 | 6 |
| ஐந்தாம் ,, | .... | 0 | 6 | 6 |

## பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 5 | 0 |
| இரண்டாம் ,, | .... | 0 | 6 | 0 |
| மூன்றும் ,, | .... | 0 | 8 | 0 |
| நான்காம் ,, | .... | 0 | 9 | 0 |

## இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ. எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம். ஐ. எஸ். ஏ.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் வகுப்பு மூன்றும் புத்தகம் | 0 | 5 | 0 |

## அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6-ஆம் ,, மூன்றும் புத்தகம் | 0 | 7 | 0 |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | 2 | 0 |
| ,, அதிபத்த நாயனர் | 0 | 2 | 0 |
| ,, வனதிநாத நாயனர் | 0 | 3 | 0 |
| ,, நந்தனர் | 0 | 5 | 0 |

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

பி. வீராகவன், அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு நெ. 94-95 இல்லத்தில் "அசோஸியேஷன்", அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.